**தலையங்கம்**

# கலியுகம் முடியும், சத்யுகம் ஆரம்பமாகும். எப்படி?

மனித வரலாறு ஒரு நாடகம். இதற்கு கால வரம்பும் உண்டு. திரும்பத் திரும்ப நடந்து கொண்டே இருக்கும். இவ்வாறான முடிவிலா நாடகத்தின் இன்னொரு சுற்றும் அதன் முடிவான நேரத்தை நெருங்கி விட்டது. வெகு விரைவிலேயே இன்றைய கலியுகம் முடிவுக்கு வரும். சத்யுகம் ஆரம்ப மாகிவிடும் என்று இந்த உண்மையைச் சொன்னால் பெரும்பாலா னோர் இதனை ஏற்கத் தயாராயில்லை. என்ன காரணம்? எதிர்மறை தீய சக்திகள் பலத்துடன் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன. இது நாளுக்கு நாள் வலிமையடைந்து கொண்டும், இதனை யாராலும் தடுக்க முடியாது என்ற அளவுக்கு அஸ்திவாரம் பலமாக வேறூன்றி விட்டதையும் கண்கூடாகப் பார்க்கின்றார்கள். இத்தனை பெரிய சக்தியை அடக்கி தன் வசப் படுத்தும் அதிகாரமுள்ள வேறொரு சக்தி இருக்கிறதா? எங்கே இருக்கிறது? இருப்பதாகத் தெரியவில்லை என்ற தீர்மானத்திற்கும் வந்து விட்டார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

பொதுவான கண்ணோட்டத்தில் மக்களுடைய இந்த கணிப்பு சரி தான். ஆனால் கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்ற நம்பிக்கையை இழந்து விட்டோமா? இல்லை அல்லவா? அசரீரியாக விளங்கும் சர்வ சக்தி வான் இருக்கின்றார். அவர் தம் காரியத்தில் கண்ணும் கருத்துமாக இலைமறை காயாக நிறை வேற்றிக் கொண்டுமிருக்கின்றார். இந்த உண்மையை அறிதல் வேண்டும். ஏனெனில் இதன் முடிவு எப்படி இருக்கும் எனும் காட்சியை திவ்ய தரிசனம் செய்வித்தும், இந்த தரிசனம் கண்ட நூற்றுக்கணக்கானோரின்


## பொருளடக்கம்

மலர்: 26 ஆகஸ்ட்-செப் 2012 இதழ்:3


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 01 |
| 2. | பகவான் வாக்கு | 04 |
| 3. | ரக்ஷா பந்தன் | 05 |
| 4. | கடவுள் படைப்பில்.... | 07 |
| 5. | திருப்தியின் சக்தி | 09 |
| 6. | உண்மையான சுதந்திரம் | 10 |
| 7. | சுட்டி - படு சுட்டி | 21 |
| 8. | கேள்வி பதில் (தாதி ஜானகிஜி) | 23 |
| 9. | நிரகங்காரி | 26 |
| 10. | முன்னேற்றமும் ஆன்மீகமும் | 30 |


இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலிருந்து தொகுத்து வழங்கப் பட்டவையாகும். ஆசிரியர்

**“தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி”**



அனுபவமும் நமது நம்பிக்கைக்கு ஆதாரமாக இருக்கின்றது. ஆகையால் அந்த திவ்ய காட்சி களைப் பற்றிய உண்மை என்ன? இதன் மூலமாக என்ன புரிந்து கொண்டோம் என்பதை மற்றெல்லோருடைய கவனத்திற்கும் கொண்டு செல்வது கடமையாகிறது.

உண்மையில் தீய சக்திகள் எவ்வளவு வலிமையுடையதாக இருப்பினும் இதற்கும் ஒரு வரம்பு நிச்சயம் உண்டு. உதாரணமாக ஒரு ரப்பர் பலூனில் காற்றை நிரப்புகிறோம். அது பருமனாகிக் கொண்டேயிருக்கிறது, தொடர்ந்து காற்றை நிரப்பிக் கொண்டேயிருந் தால் என்ன ஆகும்? அதன் அளவைத் தாண்டும் போது பலூன் வெடித்துச் சிதறிவிடு கிறது. இதுபோலவே தான் தீய சக்திகளின் கதியும் இருக்கும். நாம் எவ்வளவு கட்டுப் படுத்த முயன்றாலும், கட்டுக்குள் அடங்காத அந்த தீயசக்திகள் அதன் எல்லையைத் தொட்டுவிடும்போது தானாகவே தன்னை மாய்த்துக் கொள்ளும். அழித்துக் கொள்ளும். இப்படி நடக்கும். அடுத்து அறிவியல் ரீதியான முன்னேற்றத்தின் முதிர்ச்சி எப்படி இருக்கும். அணுசக்தியைக் கண்டு பிடித்தோம். அதன் ஆற்றலையும் தெரிந்துக் கொண்டோம். இதனைப் பயன்படுத்தி பல நன்மைகளையும் அடைந்தோம். அணுசக்தி அற்புத ஆற்றலைப் படைப்பதாக உள்ளது. ஆனால் இதனைப் பயன்படுத்தும் மனிதன் குற்றமுள்ளவனாக இருக்கிறான். மனிதனிடமுள்ள, பயமும் பலவீனமும், கோபமும், பொறாமையும் வெறுப்பும் எப்போது என்ன செய்யும் என்பது அவனுக்கே தெரியாமல் போகக்கூடும். ஏனெனில் அணுசக்தியைக் கையாளும் மனிதன் குழப்பத்தில் அச்சத்தின் காரணமாக ஆபத்தானவனாக ஆகிவிட்டான். இதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை நிதர்சனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்னொன்று ஜனப்பெருக்கம். இது சுய கட்டுப்பாட்டை இழந்து விட்டதன் விளைவாக இருக்கிறது. இதன் காரணமாக வறுமையும். ஏழ்மை நிலையும் ஒரு சிலரின் பேராசையும், சுய நலமும் இரக்கமின்மையும், அனுதாப மின்மையும் சூழ்நிலையை மேலும் சிக்கலாக்கி விட்டிருக்கிறது. இதுபோன்ற தீய சக்திகளின் ஆதிக்கத்திற்கும் அதன் வரம்பு உண்டு. இயல்பாகவே தீய சக்திகள் ஆரம்பத்தில் தன்னிச்சையாகத் தன்னை வளர்த்துக் கொள்ளும். பின்னர் தானாகவே தன்னை அழித்துக் கொள்ளவும் செய்யும். இது இயற்கையின் நியதி போலும்!

உண்மை என்னவென்றால், தீய சக்திகள் அதன் உச்சத்தைக் தொடுகின்ற அந்த சூழ் நிலையில் நல்லொழுக்க சக்திகளும் தீய சக்தி களை எதிர்த்துப் போராடிப் போராடிக் கொண்டே பலம் வாய்ந்த சக்தியாக வலுவடைந்து கொண்டேயிருக்கும். இவ்வாறாக நல்லொழுக்க சக்தியானது மாபெரும் சக்தியாக உலக அரங்கில் அதிகாரமுள்ளதாக நிலைத்து விடும். ஆதலால் வெற்றி யாருக்கு என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

இந்நிலையில் எல்லாம் வல்ல சிவ பரமாத்மாவின் அறிவுரைகளும், வழி காட்டுதலும் பேருதவியாக இருக்கும். தீய சக்திகள் தேசீய அளவிலும், உலகளவிலும் அத்துமீறி செயல்படும் போதெல்லாம் ஆத்ம சக்தியை அதிகரிக்கும் காரியமும் நடக்கும். அதாவது ஒவ்வொரு வரும் தத்தமது மன மாசுக்களை பரிவர்த்தனை செய்துக் கொள்வதன் மூலம் மனதை தன் வசத்தில் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பதாக இருக்கிறது. நல்லவர்களாவோம். நல்லதையே செய்வோம் மற்றும் சுபபாவனையும், நல்லெண்ணமும் உடையவராகி தூய அதிர்வலைகளைப் பரப்பிக் கொண்டே இருக்க

வேண்டும். ஒவ்வொரு வரின் இந்த ஒத்தாசையின் மூலம் வெற்றி யடைந்து கொண்டேயிருக்கும், தூய சக்தி யானது வேக மாகவும், மகா சக்தியாகவும் உருவாகிவிடும். தீய சக்திகள் அனைத்தும் ஒட்டுமொத்த மாகவே ஒழிந்துவிட்டது என்ற நிலை உருவாகிவிடும்.

ஆதலால் ஒவ்வொருவரும் சுய மாற்றம் கொண்டு வரவேண்டும் என்ற பொறுப்பு தனக்கு உண்டு என்பதை உணர வேண்டும். இதன் மூலமாக உலகமாற்றம் ஆரம்பமாகும். இத்தகைய முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பமாகி எழுபத்தைந்து ஆண்டுகளாகி விட்டன. மீதமிருக்கும் மிகக்குறைவான நாட்களிலேயே வெற்றி இலக்கைத் தொட்டுவிடுவோம். இவ்வாறாக தீய சக்திகள் நிறைந்த கலியுகம் முடிவுக்கு வரும். சத்யுக பொற்காலம் ஆரம்ப மாகும்.

இதற்காக நானும் இப்போதே தயாராக வேண்டும் என்பதை நினைவூட்டும் பண்டிகை தான் **ரக்க்ஷா பந்தன்.**

## ஆன்மீகப் பாதை

ஆன்மீகப் பாதை என்பதும் பள்ளிப் படிப்பைப் போன்றது தான். பள்ளிக்குச் செல்வதன் மூலம் நடைமுறை வாழ்க்கைக்கு அவசியமான பொதுவான விஷயங்களை கற்றுக் கொண்டு திறமைசாலிகளாகிறோம். இது போலவே தான் ஆன்மீகத்தில் ஆன்மாவைப் பற்றிய விஷயங் களைத் தெரிந்து கொள்கிறோம். ஆன்மாவைப் பற்றித் தெரிந்து கொண்ட பிறகு சுய சோதனை செய்து பார்க்கிறோம். குணம் எப்படிப்பட்டதாக இருக்கிறது. ஏதேனும் குறையுள்ளதா? அநாவசிய மான எதிர்மறையான தாக்கத்திலிருந்து எப்படி பாதுகாத்துக் கொள்வது என்பது பற்றியெல்லாம் சிந்திக்கிறோம்.

ஆன்மீகப் பாதையை தேர்ந்தெடுத்தோமானால் தனிப்பட்ட திறமைகளை வளர்த்துக் கொள்ள முடியாது என்று சிலர் நினைக்கிறார்கள். சரிதானா? இப்போது நமக்கு எப்படிப்பட்ட திறமை அவசியமாயிருக்கிறது? ஒருவரிடமுள்ள அகங்காரத்தை அல்லது கர்வத்தை நீக்க முடிந்தால், இதைவிட பெரிய திறமை வேறு என்ன வேண்டும்? இது போலவே, பிறரிடம் அன்பு செலுத்து வதற்கும் பெரிய திறமை வேண்டும். இதை விட்டு விட்டு, மற்ற திறமைகளைப் பற்றிச் சிந்தித்து ஏன் சிரமப்பட வேண்டும்? நீங்கள் கடவுளைப் பற்றிச் சிந்திக்கும் குணம் உடையவரா யிருந்தால், கடவுளுடைய குணம் உங்களுடையதாகிவிடும் இல்லையா?

ஆன்மீகப் பாதையில் நீங்கள் உண்மையுள்ளவராக இருங்கள். ஆன்மீகக் கல்வி கற்றதன் பயன் உண்மையாக நடப்பது தான். மேலும் உண்மையான ஆன்மீகவாதியாக ஆகிவிடுங்கள்.

***கேள்வி :- சத்குரு என்பவர் யார் ?***

***பதில் :*** *சத்யமான ஞானமளித்து, மனிதனை தூய்மையாக்கி, ஆன்மாவின் வீடான பரந்தாமத்திற்கு அழைத்துச் செல்பவர் தான் சத்குரு. மனிதனுடைய பாவங்களை நீக்கி முக்தி, ஜீவன் முக்தி அளிக்கக்கூடியவர் சத்குரு. சாது, சந்நியாசிகள் உட்பட அனைவருக்கும் கதி, சத்கதி அளிக்கக்கூடியவர் சத்குரு. ஆதலால் சத்குரு என்பவர் பரமாத்மா ஒருவர் தான். பரமாத்மாவால் மட்டுமே ஆகக்கூடிய இக்காரியங்களைச் செய்ய முடியாத எவருக்கும் இப்பட்டம் பொருந்தாது.*




**இனிமையான குழந்தைகளே!**

ஆதியில் நீங்கள் தூய்மையாகவும், அமைதியாகவும், சக்தி நிறைந்தவர்களாகவும் இருந்தீர்கள் என்பது நினைவிருக்கிறதா? நீங்கள் உங்களையும் உங்களுடைய மிக உயர்ந்த தெய்வீக அம்சங்களையும் மறந்து விட்டீர்கள். ஆகையால், இப்போது என்னை நினைவு செய்து உங்களுடைய தெய்வீகம் எனும் ஆதிநிலைக்குத் திரும்புங்கள்.

அசரீரியான நான் எல்லா ஆத்மாக்களுக்கும், தேவ தூதர்களுக்கும், தேவதைகளுக்கும் தந்தை என்பதை அறிவீர்களா? ஆகையால் எல்லோருமே சதா காலமும் அசரீரியாகவே இருக்கும் என்னிடமிருந்தே அவசியமான சக்திகளைப் பெற வேண்டியவர்களாக இருக்கின்றீர்கள். மற்றவர்களுக்கு ஸ்தூலமான அல்லது சூட்சுமமான சரீரம் உண்டு நான் மட்டுமே எனது சரீரம் என்ற எல்லைக்கு அப்பாற்பட்டு இருக்கின்றேன்.

அன்பான குழந்தைகளே! நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு. ஆதலால் கர்மத்தின் ஆழமான இரகசியத்தைப் புரிந்து கொள்ளுங்கள். இதனை தெளிவாக அறிந்து கொள்வதன் மூலமாகவும், யோகம் செய்வதன் மூலமாகவும், உங்கள் பழைய கணக்கு வழக்குகளைத் தீர்க்க முடியும்.

ஆதலால் வரும் காலங்களில் சம்பூரண சுகமும், அன்பும், ஆனந்தமும் கூடிய வளமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு தூய கர்மங்களையே செய்ய வேண்டும் என்பதில் கவனமாக இருங்கள்.

இரகசியம்: **வீணான எண்ணங்களை பகவானிடம் அர்ப்பணம் செய்ய வெற்றியின் எண்ணங்களை அவர் நமக்குத் தருவார்**



# ரக்ஷா பந்தன்

பண்டிகை என்றாலே ஒவ்வொன்றுக்கும் அதன் மகிமைக்குரிய பின்னணி இருக்கும். இந்த வரிசையில் ரக்ஷாபந்தன் பண்டிகையும் ஒரு மகத்துவம் வாய்ந்த பின்னணியைக் கொண்ட புனித விழாவாக இருக்கிறது. ரக்ஷா பந்தன் நாளன்று, குதூகலமாக வலம் வரும் சகோதரி, சகோதரன் வலது கை மணிக்கட்டில், பண்டிகையின் மகத்துவத்தை நினைவூட்டும் அடையாளச்சின்னத்தோடு கூடிய பசும் பொன்னிற கயிறை அணிவிக்கும் சடங்கு நடைபெறும். இது ராக்கி என அழைக்கப்படு கிறது. சமீபகாலம் வரையிலும் ஒரு சிலராலேயே அனுசரிக்கப்பட்டு வந்த இந்த பண்டிகை இப்போது பரவலாகியிருக்கிறது. காரணம் அனைத்து ஆத்மாக்களின் பரம தந்தை சிவ பரமாத்மா, இன்றைய சங்கமயுகத்தில் பரகாய பிரவேசம் மூலம் திவ்ய அவதாரம் செய்த பின்னர் இந்தப் பண்டிகையின் உண்மை யான இரகசியத்தை அவர் மூலமாகவே அறிகிறோம். இந்த உண்மையானது பெரும்பாலானோ ருடைய சிந்தனையைத் தூண்டி விட்டிருக் கிறது. இதன் இரகசியம் புனிதம் மற்றும் சகோதரத்துவம் என்பதாகவும், இதன் விளைவு அன்பும், மகிழ்ச்சியும் என்பதாக இருக்கிறது. எனினும் தமோபிர தானமாகிவிட்ட சமுதாய சூழ்நிலையில் இதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு டையவர்கள் வெகு சிலராகவே இருப்பது கண்கூடானது.

இந்த ராக்கி எனும் அணிகலன் பார்ப்ப தற்கு ஒரு துண்டுக் கயிறு தான். ஆனால் இது எந்த ஒரு மகத்துவப் பூர்ண பாரம் பரியத்தை நினைவூட்டுகிறது என்பதை உணரும்போது உண்மையில் இது ஒரு மகத்தான சக்தி மட்டுமல்லாது, மிகப்பெரிய புரட்சி என்றும் கூற முடியும். உதாரணமாக ஒரு மின்கம்பியில் மின்சாரம் இல்லாத போது அது ஒரு சாதாரண வயர் தான். ஆனால் இதில் மின்சாரம் செலுத்தப்படும்போது பெரிய தொழிற்சாலைகளில் உள்ள மிகப்பெரிய உருளை களையும் சுழற்றக்கூடிய சக்தியுடையதாக இருக் கின்றது. இதுபோலவே, ரக்ஷாபந்தன் பண்டிகையின் போது அணிவிக்கப்படும் ராக்கியின் பின்னணியிலுள்ள உண்மையான அன்பு மற்றும் ஞானம் என்ற இந்த இரண்டும் சேரும்போது எந்த ஒரு மனிதனுடைய உள்ளத்தையும் மாற்றக்கூடிய மிகப்பெரிய சக்தியாக உருவாகிவிடுகிறது. சகோதரியானவள் சகோதரரின் நெற்றியில் புன்முறுவல் பூத்த முகதோடு திலகமிட்டு, கையில் ராக்கி அணிவிக்கும்போது அந்த உண்மையான அன்பு நிறைந்த உணர்வு பூர்வமான சகோதர உறவை, அந்த இருவர் மட்டுமல்லாது இதைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கும் மற்றவரும் கூட மனம் நெகிழ்ந்து போவார்கள் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை.

அமைதியான வாழ்வுக்கு அன்பு நிறைந்த உறவு என்பது மிகமிக அவசியமானதாக இருக்கின்றது. எங்கே உண்மையான அன்பு இருக்குமோ அங்கு அன்பான உறவும் நிச்சயமாக இருக்கும். மாறாக வெறுப்பும், விரோதமும், பொறாமையும் இருக்குமிடத்தில் அமைதி இருக்க முடியாது. எப்போது அன்பும், நல் ஆதரவும் ஒத்துழைப்பும் அக்கறையும் உதவுகின்ற மனப்பான்மையும் இருக்குமோ அப்போது தான் மனம்அமைதியையும், ஆறுதலையும், மகிழ்ச்சியையும் அனுபவம் செய்யும். இத்தகைய மனப்பாங்குடைய வரிடையே இருக்கும்போது வாழ்க்கை என்பது மிக இனிமையானது தான் என்று மனதில்

தோன்றும்.

சமுதாயத்தில் இத்தகையதொரு சூழ்நிலையை உருவாக்கிவிட முடியுமானால் இதைவிட மிகப்பெரிய புரட்சி வேறெதுவும் இருக்க முடியாது. மனித மனங்களை இத்தகையதொரு சூழ்நிலைக்கு தயார் செய்யக் கூடிய சேவையை ரக்ஷா பந்தன் செய்ய முடியும்.

ரக்ஷா பந்தன் அல்லது ராக்கி அணியும் விழாவானது ஒரு சாதாரண சடங்கோ, அல்லது தற்காலிகமாகக் கொண்டாடி மகிழும் பண்டிகையோ அல்ல. மாறாக, மனிதரிடையே அன்பும், மகிழ்ச்சியும் நிறைந்த உறவு உருவாகிட வேண்டும் என்ற விழிப்புணர்வு எல்லோரும் பெற வேண்டும். இந்த உயர்ந்த குறிக்கோளோடு சமுதாயத்தில் எல்லோரும் ஒருவர்க்கொருவர் உண்மையான சகோதரத்துவ உணர்வுடன் அன்பு நிறைந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்பதும் இதில் அனைவரின் ஒத்துழைப்பும் இன்றியமையாதது என்பதும் முக்கியமானதாகும்.

ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் ஒரு அழிவற்ற ஆத்மா தான். அழிவற்ற பரம் பொருள் பரமாத்மாவின் அன்பான குழந்தை களும் ஆவார்கள். ஆதலால் இதனடிப் படையில் நாம் ஒவ்வொருவரும் ஒருவர்க் கொருவரின் உறவு என்னவாக இருக்கும்? சகோதரர்கள். இந்த அடிப்படையான உண்மையை உணரும்போது நாம் ஒருவர்க் கொருவர் எதிரிகள் அல்ல. அந்நியரும் அல்ல. சகோதராகள் என்ற உண்மை மேலோங்கும்.

ரக்ஷா பந்தன் விழாவின் குறிக்கோள் இத்தகைய மாற்றத்தைக் கொண்டுவர உதவ வேண்டும் என்பது தான். ஆதலால் இங்கு மட்டுமல்லாது உலகளவில் இந்த உணர்வோடு இப்பண்டிகையைக் கொண்டாட வேண்டும். இதன் முடிவில் முட்புதர்போலாகிவிட்ட இந்த உலகம் மணம் வீசும் மலர்ச்சோலையாக மாறும்.

## பஞ்ச விகாரங்களை நீக்குதல்



எப்போது நாம், தன்னை சரீரம் என்று நினைத்து அதைப் பயன்படுத்த ஆரம்பித்தோமோ, அப்போது நமது சுயதர்மமாகிய தூய்மையிலிருந்து கீழிறங்கி விட்டோம். ஆத்மாக்களாகிய நாம் பிறவிச் சக்கரத்தில் பல சரீரங்களை ஆதாரமாக எடுத்தோம். காலப் போக்கில், சரீரத்தை தீய வழியில் பயன்படுத்தினோம். இதன் காரணமாக ஆத்மா, மாசுடையதாக ஆகிவிட்டது. இதனால் அமைதியையும், மகிழ்ச்சியையும், அன்பையும், தூய்மையையும் இழந்து விட்டோம். நாளுக்கு நாள் இந்த அறியாமையின் காரணமாக எதிர்மறையான சிந்தனையும், சக்தியும் ஆத்மாவை வெகு ஆழமான பாதிப்புக்குள்ளாக்கிவிட்டது. இவை அனைத்தையும் ஆத்மாவிலிருந்து நீக்குவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

எனினும் கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட வேண்டும் என்று அதில் கவனம் செலுத்த ஆரம்பிக்கிறோம். புகை பிடித்தல், மது அருந்துதல் மற்றும் இதர இச்சைகளிலிருந்து விடுபடுதல் ஆகியவை. ஆனால் உண்மையான முயற்சி என்பது ஆழமாகப் பதிந்துவிட்ட சூட்சுமமான அகங்காரத்திலிருந்து விடுபடுவதுதான். ஏனெனில் இம்மாதிரியான தீய குணம், நாம் கடவுளுக்குப் பாத்திரமானவர்கள் என்று சிந்திப்பதற்கு அனுமதிப்பதில்லை.

# கடவுள் படைப்பில் தீய சக்திகள் நுழைந்தது எப்படி ?



உலகிலுள்ள மதங்களும், இதர சித்தாந் தங்களும் தீய சக்திகளைப் பற்றிய சர்ச்சையில் சிக்கியுள்ளதைப் பார்க்க முடிகிறது. தீயசக்திகள் எங்கிருந்து வந்தது. எப்படி வந்தது என்பது பற்றிய புதிர் விலகும்போது, ஒரு வேளை கடவுளைப் பற்றியும், இவ்வுலகப் படைப்பு பற்றியும் இவர்கள் ஒரு தெளிவான முடிவுக்கு வரக்கூடும். கடவுளைப் பற்றிய ஒருமித்த கருத்து இல்லையாயினும் கூட, கடவுள் இருக்கின்றார் என்ற நம்பிக்கையில் ஏறக்குறைய ஒருமித்த கருத்து இல்லாமல் இல்லை. இதன் காரணமாகவே இதில் தீய சக்திகள் எப்படி நுழைய முடிந்தது என்ற சந்தேகம் நியாயமானதுதான். ஏனெனில் தீய சக்திகள் துன்பத்திற்குக் காரணமாக இருக்கின்றது என்பது தான்.

இதற்கான பதில் பலவிதமானதாக, அவரவருடைய நம்பிக்கையை பிரதிபலிப்பதாக இருக்கின்றது. **உதாரணமாக:** சில சித்தாந்த வாதிகள் தீய சக்தி என்பது படைப்பின் ஆரம்பத்திலேயே அல்லது அதற்கு முன்பே இருந்திருக்க வேண்டும் என்பதாக இருக்கின்றது. இந்த நம்பிக்கையானது ஏற்கனவே நிலவும் கருத்தோடு ஒப்பிடும்போது பொருத்த மானதாகத் தெரியவில்லை. ஏனெனில் இது எல்லாம் வல்ல இறைவனின் சக்தி எல்லைக்குட்பட்டது, தீய சக்தியை கடவுளால் ஒழிக்க முடியாது என்பதை ஒப்புக் கொள்வது போல ஆகிவிடும்.

இன்னும் ஒரு சிலர், இன்னொரு விதமான நம்பிக்கையுடையவர்களாக இருக்கின்றனர். இந்த தீய சக்திகளுக்கு இன்னொரு சக்தி காரணமாக இருக்கிறதென்றும், இந்த சக்தி ஆதியில் கடவுளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த தாகவும் பின்னர் கடவுள் இவ்வுலகில் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்து மனிதனை சொர்க்கத்திற்கு அதிபதியாக ஆக்கிய பின் கடவுளுக்கு விரோதமாக செயல்படத் துவங்கியது என்பதாக இருக்கின்றது. மேலும் இந்த தீய சக்தியை சாத்தான் என்றும் அழைக் கிறார்கள். இக்கருத்தின் படி உலகில் இரண்டு மகா சக்திகள் செயலாற்றிக் கொண்டிருக் கின்றன என்பதாக இருக்கின்றது. ஆகவே கடவுளுக்கும், இந்த மகா தீய சக்தியும் எந்த சம்மந்தத்தில் செயலாற்று கின்றன? இத் தீய சக்திக்கும் மனிதனுக்கு முள்ள சம்மந்தம் என்ன என்பது பற்றிய விளக்கமும் அவசிய மான ஒன்றாக இருக்கின்றது.

இத்தகைய குழப்பத்திலிருந்து விடுபட வேண்டும் என்று எண்ணிய வேறு சிலர், இந்த தீய சக்தியை கடவுளே உருவாக்கினார் என்று கூறிவிட்டனர். இந்த நம்பிக்கையானது, குழப்பத்தை நீக்கியதா என்றால், இல்லை என்றே கூற முடியும். உதாரணமாக எல்லோரை யும் விட அதி மேலானவராகவும், புனிதமான வராகவும் விளங்கும் கடவுள் தீய சக்தியை படைக்க வேண்டியதன் அவசியம் என்ன என்ற கேள்வி எழுகிறதல்லவா? கடவுள் தீய சக்தியைப் படைத்தார் என்றால், அவரை தந்தை என்றும், கருணைக்கடலானவர் என்றும் எப்படிக் கூற முடியும்? அவரை வழிபடும் எண்ணம், தனது உதவிக்காகவும், பாதுகாப்புக் காகவும் அழைக்கும் எண்ணம் மனதில் உண்டாகுமா? உண்மை என்னவாக இருக்கும்? கடவுள், தனது குழந்தைகள் துன்பப்பட வேண்டும் என்று நிச்சயமாக எண்ணமாட்டார். அவர் என்றென்றும், எல்லோருக்கும் கருணைக்

கடலாகவே இருக்கின்றார் என்ற நம்பிக்கை இருக்கும் போது தீய சக்தியை கடவுளே உருவாக்கினார் என்ற கூற்று தவறுதான்.

இன்னும் ஒரு சிலருடைய கருத்து வேறு விதமாக இருக்கிறது. அது என்ன? மனிதன் தீய சக்திகளோடு போராடி எப்படி வெற்றி பெறு கின்றான் என்பதை அறிய முடியும் என்ப தாகவும் இருக்கிறது. உண்மை என்ன என்பது தெரியாத போது, மனிதன் எப்படி யெல்லாம் குழப்பவாதி ஆகிவிடுகிறான் என்பதுதான் இன்றைய உலக சூழ்நிலையில் மனித வாழ்க்கையின் அனுபவங்களைப் பார்க்கும் போது, தீய சக்திகளோடு போராடி வெற்றி யடைபவர்கள் எத்தனை பேர்? தோல்வியைத் தழுவுபவர்கள் பெரும்பாலானோராகவே இருப்பது கண் கூடானது. ஆதலால் கடவுள், தீய சக்தியைப் படைத்திருப்பார் என்ற இந்த நம்பிக்கை புத்திக்குப் பொருந்துவதாக இல்லை. மேலும் மனிதனுக்கு சோதனை வருமானால், அவன் நிச்சயமாகத் தோற்று விடுவான். ஆதலால் மனிதனை சோதனைக்கு உட்படுத்து வதற்காக, தீய சக்தியை கடவுள் படைத்திருக் கக்கூடும் என்ற நம்பிக்கை சரியானதாக இருக்க முடியாது.

இதற்கெல்லாம் சரியான பதில் என்ன என்பதை கடவுள் மூலமாகவேதான் நாம் அறிந்துகொள்ள வேண்டியவர்களாயிருக் கிறோம். **பகவான் வாக்கு:** தீய சக்தியானது, ஸ்தூலத்திலும், ஜீவராசிகளிலும், மானசீக மாகவும், ஆன்மீகத்திலும் இருக்கின்றது. ஸ்தூலத்தில், தமோகுணமாகவும், மானசீகத்தில் தவறாகப் புரிந்து கொள்வதிலும், பண் பாட்டிலும், ஆன்மீகத்திலும், உண்மையைத் திரித்துக் கூறுதல் என்ற நிலையிலும், இருந்து கொண்டிருக்கிறது. அதாவது தன்னைப் பற்றிய அறியாமை என்ற ரூபத்திலும், பண்பாட்டில் தரம் குறைந்தும், விகாரங் களாகவும் இருக்கின்றது மேலும் நல்லவற்றை மறுத்தல் மற்றும் எதிர்மறை சக்தியாகவும் இருக்கின்றது. இதை நான் படைக்கவில்லை என்கிறார்.

**பகவான் வாக்கு :** நான் மனிதனை, என்னைப் போலவே புனிதமானவனாகப் படைத்தேன். மனித ஆத்மாவின் ஆதி குணம் தூய்மையானது. அன்பும், அமைதியும் நிறைந்தது. ஆனால் என்ன நேர்ந்தது? நாளடைவில் மனிதன் தேகாபிமானத்தின் காரணமாக குறையுள்ளவனாக மாறிவிட்டான். தன்னை மறந்து விட்டதன் காரணமாக அன்பானதுசிற்றின்ப வேட்கையுடையதாகி விட்டது. இது கோபம், பொறாமை, பேராசை, பற்று, கர்வம் என்று உருப்பெற்று வளர்ந்து விட்டது. இதனை கடவுள் ஏலத்தில் எடுக்க வில்லை. மனிதன் தனது தரக்குறைவான அன்பின் காரணமாக, மறதியின் காரணமாகப் பெற்ற சுய சம்பாத்தியம். தீய சக்தி என்பது என்ன என்பதைப் புரிந்து கொண்டால், இதனை சுய முயற்சியால் விலக்கி விட முடியும். ஆன்மாக்களை இத்தகைய இக்கட்டான நிலையிலிருந்து விடுதலை அளிப்பதற்காகவே கடவுள் அவதாரம் செய்கின்றார். ஆதலால் கடவுளிடமிருந்து தனக்கு வேண்டிய உதவியைப் பெற முடியும். விடுதலை அடையவும் முடியும். கடவுள் என்றும் கல்யாணகாரி தான். இதில் வேறு கருத்துக்கு இடமில்லை.

**இரகசியம்:** அமைதிக்கு முன்னே ஆன்மீகம் இருக்கும்...
அன்புக்கு முன்னே தியாகமிருக்கும்....
அறிவுக்கு முன்னே தாகம் இருக்கும்.....
ஆசைக்கு முன்னே அர்த்தம் இருக்கும்....

# திருப்தியின் சக்தி



**பி.கு. தீபநாதன், திண்டிவனம்**

அனைவரது உள்ளத்தையும் காந்தமாய் கவர்ந்திழுத்து
தன் வசம் செய்திடுமே **திருப்தி**

ஆர்ப்பரிக்கும் வெள்ளமாய் அனைத்து வித சக்திகளை
நமக்கு அளித்திடுமே **திருப்தி**

இயற்கையின் இடர்களையும், மாயா வேலைகளையும்,
கார்ட்டூன் ஷோவாக்கிடுமே **திருப்தி**

ஈஸ்வரிய, சுய, பரிவார அன்பினை பெற்றுத் தந்திடுமே **திருப்தி**

மகான் தன்மை நிறைந்து நல் மாற்றத்தை தந்திடுமே **திருப்தி**

மாயையை தோற்கடிக்கும் மாமந்திரமே **திருப்தி**

சதா திருப்தியாக நாமிருந்து ஆன்மசாதனைகள் பல படைக்க தந்தை வழி நடந்திடுவோம்

தகுதியோடு நாம் இருந்து வெற்றி மாலையிலே மணியாக வேண்டாமா?

108 மணி மாலையிலே வர முடியாது என்று எண்ண வேண்டாம்

முழுமை நிலை நாம் அடைந்தால் புது மாலைகளை அவர் தருவார் - அதற்கு

அவ்வப்போது என்றில்லாமல் சதா திருப்தியாக நாமிருப்போம்

அவ்வப்போது என்ற வார்த்தை நம் அகராதியிலே இருக்க வேண்டாம்

ஆதி தேவன் வழியினிலே அன்றாட காரியங்கள் அவர் சமம் செய்தல் வேண்டும்

அவர் வழி நடப்பதென்றால் எண்ணம், சொல், செயல் எல்லாம்
அவர் போன்று யோசித்து பிறகு செய்தல் வேண்டும்.

இறைவன் இருக்கும் மனதினிலே மற்றவரின் மாசுக்களை வைக்கலாமா?

மாசில்லா மனதாலே அவர்களுக்கென்றும் சுபபாவனை, சுப ஆசை வைக்கலாமே?

ஆசிரியரின் முகத்தினிலே அவரின் எதிர்காலம் தென்படட்டும்

முகம், நடத்தையிலே குஷி மற்றும் அதிர்ஷ்டத்தை வெளிப்படுத்த வேண்டும்

சூழ்நிலையின் சூட்சுமம் கருதி குஷியோடு நாம் இருந்து
குஷியை தினம் கொடுக்க வேண்டும்.

என் தந்தை எனச் சொல்லும் கடைசியானவரையும் மங்களப் பார்வையுடன்
மாவிருத்தி கொண்டே அவர் முன்னேற்ற நினைக்கின்றார்.

முன்னேறி செல்வதற்கு மனதில் வீண் விஷயங்களை வைத்தல் தகுமா?

காலத்தின் கட்டாயம் அசரீரி பயிற்சியினை அவசியம் செய்தல் வேண்டும்

உறுதி மொழியின் நினைவுடனே ஸ்ரீமத் என்ற கையோடு கைகோர்த்து செல்ல வேண்டும்.

தொடர்பில் உள்ளவரெல்லாம் வாரிசுகளாய் மாறி
இவ்வாழ்வின் அனுபவத்தை சொற்பொழிவு ஆற்ற வேண்டும்.
அவர்களை துணை நிற்கும் தூண்களாக நாம் மாற்ற வேண்டும்.
வாயு மண்டல மாற்றத்திற்கு ஒரே சங்கல்பத்தை ஒன்றாக செய்தல் வேண்டும்.
தீவிர முயற்சியின் வேகத்திலே உலகத்தவரின் துக்கம் சுகமாக மாற வேண்டும்.

# உண்மையான சுதந்திரம் அடைவதற்காக கடவுளின் அழைப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்.



இந்தியா 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் நாள் அரசியல் சுதந்திரம் பெற்றது. அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக மகாத்மா காந்திஜியின் தலைமையில் லட்சக்கணக்கானோர் பங்கு பெற்று தங்கள் உயிரையும், உடமைகளையும் தியாகம் செய்ய வேண்டியதாயிற்று இந்த சூழ்நிலையில், சூழ்ச்சியின் காரணமாகவும், எதிர்பாராத விதத்திலும் நாடு பிரிவினை செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத்தள்ளப்பட்டு, இதிலும் லட்சக்கணக்கானோர் பலியாகினர். இவையெல்லாம் இந்திய சுதந்திர போராட்ட வரலாறானது. விடுதலை அடைந்து விட்டால் பாரதம் ஒன்றுபடும். ஒற்றுமை நிலவும், நல்லிணக்கம் உண்டாகும். சீரும், சிறப்பும், செல்வாக்கும் மிக்க நாடாக இந்தியா ஆகிவிடும் மேலும் அந்நிய ஆதிக்கத்தில் அடிமைப்பட்ட பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலையும், பண்டைய கலாச்சாரத்தின் வளர்ச்சியும் பெற்று இராம இராஜ்யம் உருவாகி விடும் என்று கனவு கண்டோம். ஆனால் இதற்கான போராட்டம் இன்னும் நின்ற பாடில்லை.

இராம இராஜ்யம் அல்லது சுய இராஜ்யம் வேண்டும் என்பது நமது விருப்பம், நம் ஒவ்வொருவருடைய பிறப்புரிமையும் இது தான். ஆனால், இதை தானமாகப்பெற முடியாது. இராம இராஜ்யத்தில் ஒவ்வொருவரும் அரசராயிருந்தாலும், சாதாரணப் பிரஜையா யிருந்தாலும், நேர்மை மற்றும் தூய்மை எனும் பண்பினை தனது சுய தர்மமாகக் கொண்டு நடப்பவர்களாக இருப்பார்கள். இவை தான் சுகமான வாழ்வாதாரத்தின் அடிப்படை இது நடைமுறையில் இல்லாத வரையிலும், வறுமையும், வன்முறையும், சுயநலமும், பேராசையும், வெறுப்பும், விரோதமும் இருக்கும். ஆதலால் எது வேண்டும் என்பதை நாமேதான் உறுதி செய்து கொள்ள வேண்டும். இதனை சட்ட திட்டங்களால் கொண்டு வரும் முயற்சிகளையே மேற்கொண்டிருக்கிறோம். இது நமக்கு உதவவில்லை. எதற்காக சுதந்திரம் வேண்டும் என்று இவ்வளவு தியாகங்களைச் செய்தோம்? நாம் கண்ட கனவு ஏன் நிறைவேறவில்லை? நிறைவேறுவதற்காக நான் என்னை தயார் செய்ய வேண்டும். இது சூட்சுமமானது. ஸ்தூலமான முயற்சிகள் பயன்படாது. நிறைய நேரம் வீணாகிவிட்டது. மேலும் பிரச்சனை களை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே யிருக்கிறோம். ஏனெனில் நான் தான் பிரச்சனைகளுக்குக் காரணம் பிரச்சனை களுக்குக் காரணமான இந்த கர்மேந்திரியங்கள் என் வசத்தில் இல்லை.

இதில் முக்கியமானது ஜனப் பெருக்கம். இது அபரிமிதம். இது பிரச்சனைகளை அதிகமாக்கிக் கொண்டேயிருக்கிறது. இதற்காக நாம் எடுக்கும் முயற்சிகள் இந்த வேகத்திற்கும், பெறுக்கத்திற்கும் ஈடு கொடுப்பதாக இல்லை. ஆகையால் குடியிருப்பு வசதிகள் போதவில்லை. சுற்றுச் சூழல் மாசுபடிகிறது. சுகாதார நிலை கெடுகிறது. நோய்கள் பரவுகிறது. உற்பத்திக்கு வழியில்லை. தேவைகள் அதிகமாகிறது. விலைவாசிகளைக் குறைக்க

முடிவதில்லை. இவ்வளவு இக்கட்டான சூழ் நிலையிலும் கூட மனித மனங்களின் தாக்கம் தாங்கிக் கொள்ள முடியும் நிலையில் இல்லை. கல்வி அறிவின் மூலம் பிரச்சனைகள் தீர்ந்து போகும் என்று நினைத்தோம். முன்னேற் பாடுகளும் செய்தோம். எத்தனை பேருக்கு என்ன கல்வி கொடுக்க முடியும்? வருமானத்திற்கு எங்கே போவார்கள்? உலகம் முழுவதும் சுற்றிப் பார்த்தாகிவிட்டது. பிறந்து விட்டோம். வாழ வேண்டிய கட்டாயம். ஏதாவது செய்ய வேண்டும். அது தான் நடந்து கொண்டிருக்கிறது. பயன் தரும் என்று பயிருக்கு விதை போட்டோம். ஆனால் விளைந்ததோ விஷச்செடி என்ன செய்ய? இப்போது செய்ய வேண்டியதோ விதைக்கான பரிசோதனை.

நாம் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்து விட்டோம். இப்போது நாம் எவ்வளவு சுதந்திரமாக இருக்கிறோம் என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கிறோம். அடிமை விலங்கை பூட்டிய அந்நியனை விரட்டி வெகு நாளாயிற்று. ஆனால் அறியாமை யின் காரணமாக நாமாகவே போட்ட விலங்கு கள் இன்னும் அறுபடாமலேயே இருக்கின்றன. இவ்வாறு நம்மை அடிமையாக்கி வைத்திருக் கின்ற தீய குணங்கள் எனும் விலங்குகள் நம்மை விட்டு விலகியபாடில்லை. மேலும் மேலும் இதன் பிடி இறுகிக் கொண்டே தானிருக்கிறதே யொழிய தளர்வதாக இல்லை.

நமக்கு உண்மையான சுதந்திரம் வேண்டும் இதற்காக நம்மிடமுள்ள தீய குணங்களாகிய மாயையிலிருந்து சுதந்திரம் பெற்றாக வேண்டும். நமது துன்பங்களுக் கெல்லாம் காரணம் தீய குணங்களும், இதனால் நாம் செய்யும் தீய செயல்களுமேயாகும். நமது அன்றாட தூக்கம் இன்பக்கனவாக இருக்க வேண்டுமானால், ஒரே ஒரு வழிதான் உண்டு. நம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் பஞ்ச விகாரங்களிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு வேண்டும். இதில் உறுதியாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் நாம் சுதந்திர மனிதன் ஆவோம்.

இந்த சுதந்திரத்தை யார் தருவார்? யாருக்கு வேண்டும்? சுதந்திரம், எனக்கு வேண்டும்? எனக்கு என்றால், நான் யார்? ஆத்மாவாகிய நான் இந்த சரீரத்தில் சுதந்திர மாகவே நுழைந்தேன். பல பிறவிகள் எடுத்த போதும், பல சரீரங்களில் நுழைந்த போதும், சுதந்திரமாகவே இருந்தேன், வாழ்ந்தேன் அனுபவம் செய்தேன். ஆனால் இன்றைக்கு நான் ஏன் சுதந்திரமாக இல்லை என்று எண்ணிப் பார்க்கிறேன். ஆம் உண்மைதான் நான் சுதந்திரமாக இல்லை. காரணம்? தேகா பிமானம் என்னை அடிமையாக்கி, அதன் கட்டுக்குள் வைத்து விட்டது. தேகாபிமானம் ஆகிய சங்கிலிகளால் ஆத்மாவாகிய நான் கட்டுண்டு இருக்கிறேன். இந்த சங்கிலிகள் இருக்கும் வரை எனக்கு சுதந்திரம் இல்லை.

இந்த சங்கிலிகள் எப்படி விலகும்? எப்போது விலகும்? சுதந்திர ஆத்மாவாகிய நான் தான், இப்போது அடிமை ஆத்மாவாக இருக்கிறேன். ஆதலால் மாற்றம் என்பது தவிர்க்க முடியாதது போலும். மாறிவிட்ட நான், மீண்டும் மாறத்தான் வேண்டும். அவ்வாறா னால் எப்படி? யார் உதவுவார்? எனக்கு யார் சொந்தமோ, அவர் தான் உதவுவாரல்லவா? நான் யார்? நான் ஆத்மா, எனக்கு ஒருபோதும் அழிவில்லை. நான் இருக்கும் இந்த சரீரம் நிலையானதல்ல. ஆதலால், நிலையான ஆத்மா வாகிய எனக்கு சொந்தம் யாராக இருக்க முடியும்? நிலையானவராகவே இருக்க வேண்டும் அல்லவா? ஆகவே எனக்குச் சொந்தம் எனது தந்தை. அவர்தான் பரமாத்மா. அவர் தான் உதவுவார். தர்மம் எப்போது அழிந்து அதர்மமானதோ, அதுபோலவே

அதர்மமும், அழிந்து தர்மம் நிலைக்கும். இப்போது அதர்மம் அழிந்து தர்மம் நிலை பெற வேண்டும். இதைச் செய்வதற்காகவே பரமாத்மா அவதாரம் செய்திருக்கின்றார். இவ்வாறாகத்தான் ஆத்மா மீண்டும் பரமாத்மாவின் வழிகாட்டுதல் மூலமாக சுயதர்மத்தில் நிலைத்து விடும். இதற்கான தருணம் இப்போது தான்.

பரமாத்மாவாகிய தந்தையின் ஏற்பாட்டின் படியே இங்கு வந்தோம். நாளடைவில், நாம் அவரை மறந்து போனதும், அவர் காட்டிய வழியிலிருந்து விலகி திசை மாறிப் போனதை யும் அவர் அறிந்து கொண்டார். ஆகவே நமக்கு வழிகாட்ட வேண்டிய நேரம் வந்த போது வந்துவிட்டார். இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்? அவர் காட்டும் வழியில் நடக்க வேண்டும். இவ்வழிதான் சுகமானது. பத்திரமானது, மகிழ்ச்சியளிப்பதுமாகும்.

**பகவான் வாக்கு : இனிமையான குழந்தைகளே!**

இன்றைக்கு முழு உலகமும் யுத்த களமாகிவிட்டது. இந்த உலகை மூன்று எதிரிகள் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டனர். இதில் முக்கியமானவர்கள் சுய தர்மத்தை இழந்து விட்ட இந்தியர்கள். தேகாபிமானி களாகி விட்டவர்கள். இவர்கள் கௌரவர்கள். இரண்டாவதாக இருப்பவர்கள் யாதவர்கள். மகாபாரதத்தில் குறிப்பிட்டுள்ள இவர்கள் அழிப்பதற்காக அணு ஆயுதங்களை சேமித்துக் கொண்டே இருப்பவர்கள். இவர்கள் தங்கள் சுய நிலையை இழந்து விட்டவர்கள். போதை யில் மிதந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எப்போது என்ன செய்வார்கள் என்பதை இவர்களே அறியமாட்டார்கள். மூன்றாவதாக இப்போது உருவாகிக் கொண்டிருக்கும் அஹிம்சை சேனை. ஆத்ம அபிமானிகளாக இருக்கும் இவர்கள் பாண்டவர்கள். இவர்களிட மும் சக்தி வாய்ந்த ஆயுதங்களுண்டு. ஆனால் இவைகள் கடவுளின் சக்தி நிறைந்த ஞானமும், யோகமும், எனும் ஆயுதங்களாக இருக்கின்றன. ஆதலால் இவர்கள் மறைமுகமாக இருக்கின்ற சேனை. இவர்கள் யோகிகள், புனிதமானவர் கள். புனித சகோதரிகளும், புனித தாய்மார் களும் இணைந்த சக்தி சேனையால், வழி நடத்தப்படுபவர்கள். இவர்கள் மாயை சக்தியை வதம் செய்து, இந்தியாவுக்கும், முழு உலகத்திற்கும் சுதந்திரம் அளிப்பவர்கள். இதற்காக.....

கடவுள் அழைக்கின்றார் எவ்வளவு பெரிய காரியம் இப்போது நடந்து கொண்டிருக் கிறது பாருங்கள்! ஒவ்வொருவருக்குமான எனது அழைப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். மாயையை யோக சக்தியின் மூலம் வெல்லவும் உண்மையான பூரண சுதந்திரம் பெறவும், இந்த அஹிம்சை சேனையில் உங்களை உறுப்பின ராகச் சேர்த்துக் கொள்ளுங்கள். வெற்றி உங்களுக்குத் தான்.

**கேள்வி : இராஜயோகப் பயிற்சிக்காக எனது மதத்திலிருந்து மாற வேண்டுமா ?**

**பதில் :** யாரையும் மதம் மாற்றம் செய்வது இப்பயிற்சியின் நோக்கமல்ல. ஒவ்வொருவரும் தனது ஆதி நிலையை அறிந்து கொண்டு அதற்கேற்றவாறு தன்னை சரி செய்து கொள்வது எப்படி என்னும் வழியைக் காட்டுவது தான் இராஜயோகம். இது ஒரு மதம் அல்ல. மனிதனுக்குப் பொருத்தமான ஒரு வாழ்க்கைக்கலை. ஒருவர் தனது மதத்தை விட்டு விடாமல் இராஜயோக வழி முறைப் பயிற்சிகளையும் செம்மையாகச் செய்து அனுபவம் செய்ய முடிந்தால் உண்மையில் மெச்சத்தக்கதாகவே இருக்கும். இது, தான் கிரஹித்துக் கொள்ளும் தன்மையின் அடிப்படையில் ஒருவர் அடையும் திருப்தியைப் பொருத்ததாகும்.

# சுட்டி, படுசுட்டி



**சுட்டி** : அண்ணே ! அண்ணே !

**படு சுட்டி** : வாங்க தம்பி உள்ளே வாங்க, நான் இங்கதான் இருக்கேன்.

**சுட்டி:** வணக்கம் அண்ணே, சொகந்தானுங்களே !**படுசுட்டி** : கடவுள் புண்ணியத்துலே, சொகமா இருக்கேன் தம்பி. வேறே என்ன விசேஷம்.

**சுட்டி:-** அண்ணே ! நான் வந்துகிட்டிருக் கிறப்போ, ரேடியோவிலே பேசுறது காதுலே விழுந்தது. அவுங்க என்ன சொன்னாங் கன்னா? ‘‘நான்’’ ‘‘நான்’’ ‘‘னு’’ சொல்றது, இதெல்லாம் என்னது தான் ‘‘னு’’ நினைக்கிறது தவறு. அகங்காரத்தை குறிக்குதுன்னு சொல்றாப் போல பட்டது.

**படுசுட்டி** : சரி. அப்புறம் என்ன சொன்னாங்க?

**சுட்டி** : அந்தப் பேச்சை நான் முழுசாக் கேட்க முடியலே. எல்லோரும் அப்படித்தான் சொல்றாங்க. எனக்கும் சரிதான் ‘‘னு’’ படுது. ஆனா, என்ன சந்தேகம்னா இப்ப உங்களைப் பார்க்கிறதுக்கு நான் சைக்கிள்ள தான் வந்திருக் கேன். இந்த சைக்கிள் கடையிலே விலைக்கு வாங்கினது. இதுக்கு ரசீது எங்கிட்டே இருக்கு. இந்த சைக்கிள் என்னதுன்னு சொல்லக் கூடாதா? இதுலே என்ன தப்பு?

**படுசுட்டி** : தம்பி! நீங்க சொல்றது சரிதான். எல்லோரும் அப்படித்தான் நினைப்பாங்க. ஆனாலும் என்னது என்னதுன்னு நினைக்கக் கூடாதுன்னு ஏன் சொல்றாங்க? இதைக் கொஞ்சம் யோசிச்சுப் பார்க்கனும்.

**சுட்டி** : நீங்க சொல்றது சரிதான். ஆனா கொஞ்சம் வெளக்கமா சொன்னா நல்லா யிருக்கும்.

**படுசுட்டி** : பொருள் உங்களோடுதுதான், ஆனா, என்னது, என்னதுன்னு நினைக்கிறதுனாலே, பற்று ஏற்படுதுன்னு சொல்றாங்க. அதுனாலே இது ஒரு பந்தனம் ‘‘னு’’ சொல்றாங்க. இது உங்கள் சைக்கிள் தான் உங்க உபயோகத் துக்குத்தான். ஆனா பற்று இருக்கக் கூடாதுன்னு அர்த்தம்.

**சுட்டி** : பற்று ‘‘னு’’ சொன்னா அது என்ன? கொஞ்சம் வெளக்கமா சொல்ல முடியுமா?

**படுசுட்டி** : தம்பி ! பற்று ‘‘னு’’ சொன்னா, அது ஒரு சூட்சும கயிறு. பாருங்க தம்பி. உங்க சைக்கிளை நீங்க பத்திரப்படுத்தி, பத்திரப்படுத்தி வைக்கிறீங்க. ஏன்னா, பயம், தொலைஞ்சு போயிறக் கூடாதேன்னு பூட்டி வைக்கிறீங்க. ஒரு நாள் அது நிஜமாகவே தொலைஞ்சு போயிருச்சுன்னு வையுங்க. அப்போ உங்க மனசு எப்படி இருக்கும்?

**சுட்டி** : தொலைஞ்சு போச்சுன்னா, மனசுலே கவலை வரத்தானே செய்யும்.

**படுசுட்டி** : சரி, மனசு அதிகமா பாதிக்கப் படுதுன்னா, அது பற்று இருக்கிறதுனாலேதான் ‘‘னு’’ சொல்றாங்க. அப்படி இல்லாமே பொருள் வரும், போகும் ‘‘னு’’ நினைச்சு, மேலே நடக்க வேண்டியதை ஒரு நிர்வாகியைப் போல கவனிக்கனும்கிறாங்க. மனசு கஷ்டப்பட்டுக் கிட்டிருந்தா, அது பெரிய நஷ்டம் அப்படி இருக்கக் கூடாதுங்கிறாங்க.

**சுட்டி:** சரிண்ணே. சிறு பொருள் நஷ்டமாயிடுச் சுன்னா நீங்க சொல்றது சரிதான். பெரிய பொருள் நஷ்டமானா அப்படி இருக்க முடியும்களா?

**படுசுட்டி** : தம்பி இதுலே சிறுசு, பெரிசுங்கிற தில்லே. பாருங்க, உங்ககிட்ட ஒரு பொருள் இருக்கு. இது மாதிரி ஒவ்வொருத்தர் கிட்டேயும் ஏதாவது பொருள் இருக்கு. இது


எப்போதும் சாசுவதமா இருக்குமா? பரம்பரையா வந்தாலும் கூட, இங்கே தானே விட்டுட்டு போறோம். அதாவது யாராயிருந்தாலும், அவுங்க வுங்க கிட்டயிருக்கிற பொருளை பராமரிக் கிறாங்க, உபயோகிக்கிறாங்க, அப்படிங்கிறபோது, ஒரு டிரஸ்டி தானே தவிர, உண்மையிலேயே சொந்தக்காரங்க இல்லே. கோயில் சொத்துக்கு தர்மகர்த்தா நியமிக்கப்பட்டிருக்கிறதைப் போல, அவுங்கவுங்ககிட்ட இருக்கிற பொருளுக்கு, அவுங்கவுங்க தர்மகர்த்தாதான். அப்படித்தான் நடந்து வரணும் ‘‘னு’’ சொல்றாங்க தம்பி.

**சுட்டி :** அண்ணே ! கோயில் தர்மகர்த்தா ன்னு சொன்னா, அவர் பத்து பேருக்கு பதில் சொல்லனும், நமக்கு அப்படி இல்லிங்களே.

**படுசுட்டி :** தம்பி, நீங்க நினைக்கிறாப் போல தான் ரொம்பப்பேர் நினைக்கிறாங்க, இங்கதான் கொஞ்சம் கவனம் வேணும். நம்ம கிட்ட இருக்கிறதெல்லாம் நம்ம சொத்து. இதை என்ன வேணும்னாலும் செய்ய முடியும்கிற அதிகாரம் நம்ம கிட்ட இல்லே. இப்படித்தான் செய்யனும்கிற இயற்கை விதிக்கு நாம் கட்டு பட்டவங்க. இதை மறந்துடறோம். அதனாலே நாம தான் அதிகாரின்னு அப்படி இஷ்டம்போல நடக்கிறோம். வாழ்க்கையிலே கஷ்டம் வந்தா மட்டும் கடவுள் காப்பத்தனும் ‘‘னு’’ நினைக் கிறோம். வாழ்க்கையிலே அனுபவம் செய்யுற இன்ப, துன்பமெல்லாம் எப்படி வருதுன்னு தெரியாம இருக்கோம். ஒரு பிறவியோட தீர்ந்து போற சமாச்சாரமில்லை. தம்பி. எத்தனை பிறவி எடுத்தாலும் எப்படியெல்லாம் நடந்து கிட்டோம்கிற கணக்கை கோயில் தர்மாகர்த்தா ஒப்படைக்கிற மாதிரி நாம ஒப்படைக்கத்தான் வேணும். இதுக்காகத்தான் பெரியவங்க அத்துமீறி நடக்கக் கூடாதுங்கிறதுக் காக கடவுள் ஒருத்தர் இருக்கார் ‘‘னு’’ அடிக்கடி ஞாபகப்படுத்திக்கிட்டே இருப்பாங்க. அதனாலே, என்னோடதல்லங்கிற உணர்வுதான் நம்மையெல்லாம் அகங்காரத்திலேயிருந்து கவசம் போல பாதுகாக்குது. இந்த உணர்வு இல்லேன்னா.... யுத்த களத்துலே கவசம் அணியாம ஒரு வீரன்சண்டை போட்டுக் கிட்டிருந்தா அவன் நிலைமை எப்படியிருக்கும் ‘‘னு’’ யோசிச்சுப் பாருங்க. அதுனாலேதான் இந்த கவசத்தை பெரியவங்க நமக்குக் கொடுத் திருக்காங்க. இதைப் போட்டுக்கிறது தான் நல்லது ‘‘னு’’ சொல்றாங்க.

**சுட்டி :** அண்ணே ! நீங்க சொன்னதைக் கேட்டதும் எவ்வளவு அலட்சியமா நடந்து கிட்டு வர்ரோம் ‘‘னு’’ மனசுலே படுது. ரொம்ப நன்றி. வர்றேன். வணக்கம்.

## மனித குலத்திற்கு பகவானின் அன்புப் பரிசு



பற்பல பிறவிகளாக நாம் பக்தி செய்தோம். பகவானுக்கு மலர் மாலைகள் சூட்டி மகிழ்ந்தோம். இதற்குக் கைமாறாக இப்போது பகவான் நமக்கு தெய்வீக குணங்களைப் பரிசாக அளிக்கின்றார். விலை மதிக்க முடியாத ஞான ரத்தின மாலையை நமக்கு சூட்டுகின்றார். பகவானின் இந்த அன்புப் பரிசை நாம் அணிந்து கொள்ள வேண்டும். இது நமது சௌபாக்கியத்தின் அடையாளமாகும். இதன் மூலம் நாம மேலும் பன்மடங்கு பாக்கியசாலிகளாக முடியும்.

# ஜானகி தாதிஜி அண்மையில் லண்டனில் 700 பேர் கூடிய சபையினர் மத்தியில் அளித்தப் பேட்டி



**தமிழகாக்கம்: பி.கு. துர்காபிராசத், சாந்திவன், மதுபன்**

**கேள்வி : நாம் எல்லோரும் வெளிப்படையான அமைதியைப் பற்றி அறிந்திருக்கிறோம். ஆனால் தியானம் பழகுபவர் ஆழ்ந்த உள் மன அமைதியைப் பற்றி கூறுகிறார்கள். பலவிதமான அமைதி நிலைகளைப் பற்றி உங்கள் சிந்தனை என்ன?**

அமைதி எனும் வார்த்தையை நாம் உபயோகிக்கும் போது உள்நோக்கிச் செல்கின்றோம். மனதில் சாந்தியை அனுபவிக்க அமைதியை (ஓசை இல்லாமை) நாம் அனுபவம் செய்ய வேண்டியிருக்கிறது. பொதுவாக நாம் அதிகமாகப் பேசும் பழக்கத்தில் வந்து விட்டோம். அமைதியில் இருக்க விரும்பினாலும் மனமானது பேசிக் கொண்டே இருக்கிறது. எதிர்மறையான எண்ணங்கள், கவலைகளால் உண்டான எண்ணங்கள், வீணான எண்ணங்களாகியவையால் உள் மன அமைதியை அனுபவிப்பது பாதிக்கப்படுகிறது. நான் வீணான எண்ணங்களில் நேரத்தை பயனற்றதாக ஆக்க விரும்பவில்லை. நம் கவலைகளிலிருந்து விடுபட மன அமைதியானது மிக அவசியமானதாகத் தேவைப்படுகிறது. துக்கம், பயம், சந்தேகம் போன்றவை நம்முடைய தைரியம், நம்பிக்கை ஆகியவற்றை நம்மை நாம் அன்புடனும், நேர்மையுடனும் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அப்பொழுதே அமைதியை அனுபவிக்க முடியும். விஞ்ஞானத்தில் மனிதன் சாதித்த புதுமைகள் அமைதியின் சக்தியினால் தான். ஆனால் விஞ்ஞானம் மனச் சாந்தியைக் கொடுக்க முடியவில்லை. உள் மன அமைதியை அனுபவம் செய்ய சக்தித் தேவைப்படுகிறது. நான் யார் என்பதை அறிந்து புரிந்துக் கொள்வதினாலேயே இது சாத்தியமாகுமேயன்றி நம் புத்தியின் கூர்மையினால் அல்ல. கவலை, வீணான எண்ணங்கள் ஆகியவைகளிலிருந்து நாம் விடு பட வேண்டும். இதற்காக நம்முடைய சிந்தனைச் சக்தியை உபயோகம் செய்து ஒருமுனைப் படுத்தும் சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். புத்தியானது ஒரு நிலையில் நிலைத்துச் செயல்படும்போது உள் மனதில் நல்ல உணர்வுகளை உண்டாக்குகிறது. ஆழ்ந்த தூய்மையான உணர்வுகள், அமைதியை அனுபவம் செய்ய வேண்டுமெனும் ஆழ்ந்த விருப்பம், அந்த அனுபவத்தை உண்டாக்கும். நம்முடைய எல்லா இந்திரியங்களும் கண், காது, வாய் கூட அதற்கு ஏற்றவாறு வெளி உலகில் நடப்பவைக்குப் பதில் கொடுக்கும்.

**கேள்வி : இதற்காக, நேரம் எடுத்துக் கொண்டு, நான் யார்? என்பதை உணர்ந்து கொள்ள, நம் எண்ணங்களை ஒரு நிலைப்படுத்தி நம்மை அறிந்துக் கொள்ளும் சிந்தனைகளில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது என அறிகிறேன். அடுத்து, நான் அமைதிக்கும், உடலின் ஆரோக்கியத்தை குணப்படுத்துவதற்கும் உள்ள தொடர்பினை அறிந்துக் கொள்ள விரும்புகிறேன், ஏனென்றால், உங்களுடன் நெருங்கியுள்ளவர்கள், உடம்பில் உண்டாகும் பலவிதமானப் பிரச்சனைகளை நீங்கள் எதிர்கொள்ள நேரிடினும், அமைதியின் சக்தியினால் அவற்றை சமாளித்துச் செயல்படுவதை நேரில் பார்த்திருக்கிறார்கள், அது எவ்வாறு சாத்தியமாகிறது?**

**பதில் :** எல்லாவற்றுக்கும் அனுபவமுள்ள, பயனளிக்கக்கூடிய விளக்கம் தேவைப்படுகிறது.

இவற்றை கேட்பதனால் மட்டும் பயன் பெற முடியாது. உங்களுடைய உள்ளத்தை சோதித்துப் பாருங்கள். அதில் ஏதாவது துக்கம் அடங்கி இருக்கும். அதனால் சில நேரங்களில் கண்ணீர் வடிக்கிறோம். எனது இருதயமானது மிகவும் வலிமை வாய்ந்தது என நான் நினைக்கின்றேன். எப்பொழுதும் அது பாதிக்கப்படுவது இல்லை. தாதியினுடைய இருதயமானது (உள்ளம்) வலி மையானது, உறுதியானது, ஆனால் கருணையும் நிரம்பியது, நேர்மையானதுமாகும், அது புண்படுவதில்லை. புண்படாமல் இருப்பதால் எளிதாகக் குணமடைகிறது. யாராவது புண் படுத்தினார்கள் என்று நினைத்தால் மனதிலேயே நான் அதை வைத்திருக்கின்றேன். நான் மன்னிப்பு உங்களுக்குக் கொடுக்கவில்லை என்றால் மறக்கவும் முடியாது. நம்முடைய இருதயமானது மன்னிப்புக் கொடுக்கக் கூடியத்தன்மை யுடையதாக இருக்க வேண்டும். நாம் தவறு செய்தால் கடவுளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். ஒரு இடத்தில் அமைதியாக அமர்ந்து அன்றைய நேரம் எவ்வாறு கழிந்தது என்று சிந்தியுங்கள். எங்கு என்னுடைய அமைதியை இழந்தேன்? அவ்வாறானால் என்னால் மன்னிப்புக் கொடுக்க முடியுமா? நேர்மையான கருணை யுள்ளம் கொண்டவராக இருந்தால் கடவுளின் மன்னிப்பை அனுபவம் செய்வோம் என்று நான் உணர்கிறேன். கடவுளிடத்தில் உண்மையான தொடர்பு கொள்வதால் சக்தியை அனுபவம் செய்வதை நாம் உணர்கிறோம். அதன் பலனாக திடமான கருணையுள்ள நேர்மையான உள்ளத்தை நாம் அடைகிறோம். அதனால் மற்றவருடைய ஆசீர்வாதமும் பெறுகிறோம். உங்களுடைய இயல்புகளை சரளமானதாகவும், மன்னித்து மறக்கும் தன்மை உடையதாக வைத்துக் கொள்ளவும். நேர்மையான உள்ளத்தினால் நேரிடையாக காணும் பலன், மன ஆரோக்கியம், நம்முடைய தொடர்புகள் ஆகியவை நன்கு அமையும். பழையனவற்றை முடித்துவிடவில்லை என்றால், நம்மிடத்திலிருந்து புதியவை நல்லதாக வெளிப்படாது. அமைதியை அனுபவிக்க உங்கள் மேலான நேரத்தை ஒதுக்கவும். உண்பதற்கு முன்பும், ஒரு காரியத்தில் செயலில் வரும் முன்பும் அமைதியிலிருந்து செயல்பட்டோ மென்றால் நாம் எதனாலும் பாதிக்கப்பட மாட்டோம். அமைதி என்பது ஒரு இடத்தில் செயலற்று வீற்றிருப்பதல்ல. அது மிக சக்தி வாய்ந்த நிலையில் செயலாற்றுவதைப் பற்றியதாகும்.

**கேள்வி : மனம், புத்தி, உள்ளம் இந்த மூன்றுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. சில நேரங்களில் வெளிப்படும் விஷயங்களை அறிவதால் உணர்ச்சிகளுக்கு உட்பட்டு சரியான முடிவுகள், தீர்மானங்கள் எடுக்க முடிவதில்லை. ஒன்றும் செய்யாமல் இருக்கின்றோம் என்ற உணர்ச்சி களிடையேயும் உங்களால் ஆழ்ந்த அமைதியின் உணர்வுகளை எவ்வாறு உணர முடிகிறது?**

**பதில் :** உண்மையாக நான் செய்வது ஒன்று மில்லை. பொறுப்பினுடையச் சுமை எல்லாம் புத்தி ஏற்றுக் கொள்கிறது. கவலை அல்லது நான் இதைச் செய்தாக வேண்டும் போன்ற மனத்தில் எழும் ஒலியானது அகங்காரத்தினால் எழும் வார்த்தைகளாகும். கீதா அறிவுரை யாதென்றால் உங்களை ஒரு கருவியாகவே கருதுங்கள் என்று. கருவியாக இருப்பது என்பதன் பொருள் என்ன? கடவுளிடத்தில் தொடர்பு கொண்டு உறுதியுடன் எண்ணங்கள் கொண்டிருப்ப தேயாகும். அதிகமாக ஒரு விஷயத்திலேயே கருத்தைச் செலுத்தினால், அந்த எண்ணங்களானது உயர் நிலை அடையாது. இன்று வெளியுலகத்தில் பொய், உண்மையில்லாத நிலை, நல் உணர்வுகளுக்கு சற்றும் மதிப்புக் கொடுக்காத நிலை இருந்து வருகிறது. மகாத்மா காந்தி உண்மையும், அஹிம்சையும் கொண்டு வர மிக முயற்சி செய்தார். நாம் வெறும் கருவி தான் என்று உணர வேண்டும். என்னைக் கருவியாக கருதி, ஒரு எண்ணம் நடக்க வேண்டுமென்று,

நினைவில் வருகிறது என்றால், அது நிறைவேறுகிறது. இந்த நிகழ்ச்சியானது அவ்வாறே நிகழ்ந்தது நான் செய்தது ஒன்றுமில்லை. நம் காரியமானது சரியானதாக இருக்கும் போது மேலே இருப்பவரிடம் சுலபமாக தொடர்பு கொள்ள முடிகிறது.

நாம் நான்கு விதமான எண்ணங்களைக் கொள்கின்றோம். **1. கோபம் போன்ற எதிர்மறையான எண்ணங்கள். அவை அமைதியாக இருந்து நாம் கடவுளுக்கு உரியவர் என நினைவுக் கொள்ள முடியாது. 2. வீணான எண்ணங்கள் காரணமின்றியே தோன்றும். இவை நம்மை சக்தியற்றவராக்கும். 3. சாதாரணமான எண்ணங்கள் உடல், பொருள், சிநேகிதர், பணம், பெயர் ஆகியவற்றின் தொடர்புகள் உடையவை. 4. ஆக்கப்பூர்வமான எண்ணங்ககள்.** இவற்றை நாம் அறிந்து நினைவு கொள்வது முக்கியமானது ஆகும். அவை கருணை, நல் நட்பு, நற்பண்புகள் போன்றவை அடங்கியனவாய், கடவுளால் விரும்பப்படுவனவாய் இருக்கும். கடவுள் கேட்கிறார், நீ என்னுடைய குழந்தை உன்னிடத் தில் எத்தகைய எண்ணங்கள் தோன்ற வேண்டும். தூய்மை, அமைதி, அமைதியில் அன்பு, அன்பில் மகிழ்ச்சி, மகிழ்ச்சியில் சக்தி இருக்கிறது. எனக்கு இது கடவுள் தந்தப் பரிசாகும். அவர் சொல்வதை நான் நினைவு கொள்கிறேன், வேறு எதுவும் தேவையில்லை. இதை நடைமுறை வாழ்க்கையில் அங்கீகரித்து செயல் வழியில் நடத்தினீர்கள் என்றால் மிகச் சிறந்த நாளாக உங்களுக்கு அமையும். துக்கத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள், கொடுக்காதீர்கள் எல்லாம் வல்லவர் எதையும் உங்களுக்குத் தர தயாராக இருக்கிறார். அளவில்லாத அளவில் கொடுக் கிறார். என்னுடைய பொறுப்பானது ஏற்க தகுதி உள்ள கடவுளின் குழந்தையாக எல்லாவற்றையும் அடைய முயற்சி செய்வதேயாகும்.

## பணிவுடைமை



கர்வம் அல்லது தற்பெருமை என்பது மிக ஆழமான பதிவுகளாக இருக்கின்றன. தன்னிடம் கர்வம் உள்ளது என்பது அநேகருக்குத் தெரிவதில்லை.

கர்வம், அன்பை அழித்து விடும். கற்றுக் கொள்ள வேண்டும் என்ற முனைப்பையும் அழித்துவிடும். இதன் காரணமாக அணுகுமுறையும், நட்பும் சுமுமாக இல்லை. ஒவ்வொரு நாளும், பலரைச் சந்திக்கும் வாய்ப்புகள் வருவதுண்டு. இதில் ஒவ்வொருவரிடமும் அன்பாகவே நடந்து கொண்டோம் என்பது முக்கியம். பணிவுள்ளவராக இருப்பதன் மூலம் அகங்காரத்தை அகற்றி விட முடியும். ஆத்மாவானது உண்மையுள்ள அல்லது நேர்மையுள்ளதாக இருக்குமளவு பணிவுள்ளதாகவும் இருக்க வேண்டும். இதனால், நேர்மை அதிகமாகும்போது பணிவுத் தன்மையும் அதிகமாகும். ஏனெனில் நேர்மையும், பணிவும் ஜோடிகள். பணிவுள்ள இடத்தில் அன்பு இருக்கும். பணிவுத் தன்மை இல்லையென்றால், அன்பும் இருக்காது. எவ்வளவு பணிவுத் தன்மையுடையவராக ஆகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது.

இதில் அடங்கியுள்ள இரகசியம் என்னவென்றால், கடவுளிடம் அன்பு செலுத்துவது, கடவுளிடமிருந்து அன்பைப் பெறுவது என்பது தடைபடாது. இதன் மூலம், எந்தக் காரணம் கொண்டும் பாதிக்கப்படாத பலமுள்ள இதயமுடையவராக இருப்பேன். ஏனெனில் மனம் புண்படும்போது, அன்பு தடைபடுகிறது.

# நிரகங்காரி நிலை

பி.கு. துர்காபிரசாத், மவுண்ட் அபு

நிரகங்காரி நிலையின் ஆழத்தை அறிய, முதலில் அகங்கார நிலையினைப் பற்றி நாம் சிறிது விவரமாக அறிய வேண்டியிருக்கிறது. அகங்காரமானது மிக சூட்சுமமானது, ஆனால் விகாரங்களின் எண் வரிசையில் மிகக் கடுமை யானத் தரத்தைச் சார்ந்ததாகும். அகங்காரம், ஆணவம், அகந்தை, தற்பெருமை, செருக்கு எனப் பலப்பெயர்களில் மனிதனை வாட்டிப் படைக்கிறது. மற்ற விகாரங்களின் வகைகளிலி ருந்து வேறுப்பட்டதாகும். ஒருவருடைய புத்தியுடன் இது அதிகத் தொடர்புக் கொண்ட தாகும். தாதி ஜானகிஜி அவர்கள் சொல்வார்கள், ஒரு காரியத்தை வெற்றியுடன் முடித்தால் கடைசியில் வெகு நன்றாகச் சாதித்தீர்கள் என உங்களைப் புகழத் தயாராக அகங்காரம் காத்திருக்கும்.

இது எளிதாக நமக்கு காணவராமல் பல எதிர்மறையான விளைவுகளை, நம் தொடர்பு களிடையே உண்டாக்கக் கூடியதாகும். இதனால் ஆட்கொள்ளப்பட்டவர் நிச்சயமாகத் தங்கள் சுயமரியாதையை இழந்து விட்டனர் என்று சொல்லலாம். அகங்காரமுள்ளவரின் எதிர்பார்ப்பு கள் அதிகமானதாகும். எல்லோரும் தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என விரும்புவர், ஆனால் மற்றவருக்கு இவர்கள் மதிப்புக் கொடுக்க மாட்டார்கள். இவர்கள் உள்ளமானது அடைந்துக்கிடக்கும். மற்றவர் குறைகளை யானைக் கண்களுடன் காண்பர் (சிறியதானவை ஆனால் பெரியதாகக் காணல்) ஆதலால் தான் பாபா கடைசியாக உரைத்த வார்த்தைகள் நிராகாரி-நிர்விகாரி-நிரகங்காரி ஆகியவைகளில் முதல் இரண்டையும் அடைந்து விட்டோம் என்றாலும் அகங்காரத்திலிருந்து விடுதலை யான நிரகங்காரிகளாக வேண்டும் என்பதை குறிக்கவே கடைசி வார்த்தையாக இது கூறப் பட்டது.

அகங்காரமானது நுண்ணிய நிலைகளில் ஒருவருடன் போட்டியிடுதல், மற்றவருடன் ஒப்பிடுதல், அவர்கள் குறைகளைக் காணல் ஆகிய உருவங்களில் வெளிப்படக்கூடும். சில நேரங்களில், இவ்வாறான தவறுகளிலிருந்து நாம் விடுபட நாம் எப்பொழுதும் மற்றவரின் சிறப்பைக் காண்பதிலும், எல்லோருக்கும் மரியாதைக் கொடுப்பது, அவர்களையும் தன்னவராக ஏற்றுக் கொள்ளுதல் ஆகிய பண்புகளை வளர்த்துக் கொள்வது முக்கிய மானதாகும். உண்மையில் தனிப்பட்ட சிறப்புகள் எல்லோரிடமும் இருக்கத்தான் செய்யும். ஒருவரை மற்றவருடன் ஒப்பிட்டுச் சரி பார்த்தால் நல்லதல்ல. நாம் அகங்காரத்திலிருந்து விடுபட்டு, மற்றவர்களுடைய தனிச்சிறப்புகள், பண்புகளாகியவற்றைக் காணும்போது திறந்த உள்ளத்துடன் அவர்களை நாம் ஏற்றுக் கொள்கிறோம், எப்பொழுதும் நம் மனதில் இம் மேலானக் கதவுகளை திறந்து வைத்திருக்க வேண்டும். அகந்தை சிறிதும் இல்லாதவரின் உள்ளமானது தூய்மையான உள்ளமாகும்.

பண்புகள், திறன்கள் பற்றி பொதுவாகக் கூறும் போது, தரமானது, உயர்த்தரமானது, அதிக மேம்பட்ட தரமுடையது எனச் சொல்லாம். ஒருவரிடம் உள்ள சிறப்புப் பண்புகளைப் பாராட்டும்போது அவை மேலும் வளரக்கூடும். ஆனால் ஆணவம் கொண்ட வரிடம், நாம் உங்கள் திறமையை மேலும் உயர்த்த வாய்ப்பு இருக்கிறது என்றுச் சொன்னால், குறைக் கூறகிறார்கள் என எடுத்துக் கொள்வர். அதை அங்கீகரிக்கவும் மாட்டார்கள், ஏனென்றால் சாட்சியாக

தன்னையும், தன் செயல்களையும் காணும் பழக்கம் இவர்களிடம் காணவராது.

சங்கமயுக பிராமண வாழ்க்கையின் இலக்கானது தெய்வீக நற்பண்புகள், குணங்களை முழுமையாக அடைந்து சொரூபமாகவே மாறி, இறுதியில் முற்றிலும் நிராகாரி, நிர்விகாரி, நிரகங்காரியாக ஆக வேண்டும் என்பதாகும். நற்பண்புகளானது தெய்வீக நிலையை எட்டக்கூடியது. தூய ஆன்மாக்களின் சகஜமான நிலையாகும். தெய்வீகத் தன்மையானது ஆத்மா இயல்பாக அடையக் கூடியதாகும். பழகப் பழக தெய்வீக நிலை ஆன்மாவில் உயர்வு அடைந்துக் கொண்டேச் செல்லும். இயற்கையில் சூரியனின் வெளிச்சம், ரோசாப்பூக்களின் நறுமணம் ஆகியவை இயல்பாக வெளிப்படுபவை. புகழத்தேவையில்லை. புகழ்ந்தாலும் மாற்றம் காணவராது. ஆன்மாக்களின் தெய்வீக குணங்களும் தன் இயல்பாக வெளிப்படும் போது புகழவும் தேவையில்லை.

அகங்காரமுள்ளவர் தங்கள் சிறப்புகளை எடுத்துரைக்கவும், மற்றவரின் தாழ்வு நிலையைச் சுட்டிக் காட்டவுமே பிறருடன் ஒப்பிட்டுப்பார்ப்பார்கள். உண்மையில், இவர்கள் உள்ளுக்குள் தங்கள் குறைகளை அறிந்தவராய் இருப்பதால், அவற்றை மறைக்கவே வெளிப்படையாக புகழ்ச்சியை நாடியவாறு, தங்கள் தற்பெருமையைப் பாடிக்கொண்டிருப்பார்கள். ஆதலால் அகங்கார முள்ளவர் தெய்வீகப் பண்புகளை அடைய விரும்பினால் தங்கள் மனோ நிலைகளிலும் உணர்வுகளிலும் பெரும் மாற்றத்தைக் கண்டேயாக வேண்டும். அகங்கார முள்ளவரும் தெய்வீக பண்புகளுடன் நிறைவு பெறும்போது மாற்றம் அடையக்கூடும். இதற்காக அவர்கள் பிறருக்கு மதிப்புக் கொடுக்கவும், அவர்களை சமமாக ஏற்றுக் கொள்ளும் சுபபாவனையும் தன்னை மற்றவருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பழக்கங்கள் ஆகியவற்றிலிருந்து விலக அறிந்துக் கொள்வது அவசியமாகும்.

அடக்கமான பண்புடையவர் தங்கள் பெருமையைப்பாட மாட்டார்கள். மற்றவரின் பெருமையையும் பாட மாட்டார்கள். எல்லாவற்றிற்கும் அடித்தளமாக அமைவது தேக அபிமானமேயாகும். பாபா, நிராகாரி, நிர்விகாரி, நிரகங்காரியாகுங்கள் என்றுச் சொல்கிறார். இதற்கு ஆன்மாவின் உள்ளடங்கிய குணங்களில் நாம் மாற்றத்தைக் காண வேண்டும். குணங்களை மாற்ற நற்பண்புகள் எனும் கதவுகளை மனதில் திறக்க வேண்டும். பண்புகள் இயற்கையானதாகவும், தெய்வீகமான தாகவும் இருப்பதால் நுண்ணியமாக வெளிப்படக்கூடியதாகும். இதற்கு மிக இன்றியமை யாததாகத் தேவைப்படுவது மனதின் தூய்மையே ஆகும். நம்மில் அமைதியை வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்மில் அமைதியானது நம்மிடத்தில் மட்டுமின்றி மற்ற வரிடத்திலும் அமைதியையும், பொறுமை யையும் வளர்த்துக் கொள்ளும்.

உள்முகத்துடன் ஆத்மா தன்னைத் தான் சோதித்துக் கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். ஆன்மீகத்தை பழகப்பழக, என்னுடையக் கருத்து, என்னுடைய மதிப்பீடு, என் திறன், என் தரம், என்னுடைய பிரச்சினை, என்னுடைய சாதனை, ஆகியவையெல்லாம் மறைந்து விடும். இவை எல்லாம் என்னுடையது அல்ல. என்னுடைய உருவம் ஆன்மீக உருவம், இந்த எல்லையற்ற நாடகம், அதில் என்னுடைய அழிவில்லாத பாத்திரம் இவையே நினைவிலிருக்கும். இந்த பொறுப்பு எனும் நாற்காலி தற்காலீகமானது, நான் செல்லுமிடமெல்லாம் என்னுடன் வராது. என்னுடைய உடலை தந்தை சொல்லும் வழியில் நாடகத்தில் பாத்திரத்தை நடத்த பயன்படச் செய்வதே என் கடமை எனச் சொல்லியவாறு செயல்படுவார்கள். பாபாவும் அவ்வாறே விரும்புகிறார்.

ஆன்மீக உணர்வில் உள்ளவர் பாபாவுக்கும், நாடகத்திற்கும் தன்னுடைய பாக்கியமும், எப்பொழுதும் உணர்ந்து ஆஹா, ஆஹா என்று நன்றியைச் செலுத்துவர்.

ஆத்ம அபிமானி நிலை, நிராகாரி நிலைகள் தானாகவே உள்முக உணர்வுடன் தன்னைச் சோதித்துக் கொள்ளும் பழக்கத்தை வலுப்படுத்தும். இப்பழக்கம் தன்னுடைய கர்மேந்திரியங்கள் எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கின்றன? பாபா கூறியதைப்போல் அகங்காரமற்ற நிலையை அடைந்துத் தீர வேண்டுமெனும் குறிக்கோள் கொண்ட என்னுடைய நோக்கத்தை அடைய ஒத்துழைக் கின்றனவா? என்பதை அறிய உதவும் வெளி உலகப் பார்வையுடைய பழக்கத்தைக் கொண்ட தேகாபிமான நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நிலையாகும். மாறாக, உள் முகனோக்குடன் தன்னைச் சோதித்துக் கொள்ளும் பழக்கமானது பாபாவுடன் தானாகவே நாம் நேர்முகமாக உள்ளம் கொண்டு உரையாட வழிவகுக்கும்.

அடுத்து நிரகங்காரியாக ஆக தெய்வீக நற்பண்புகளின் மீது நம் கவனத்தைச் செலுத்த வேண்டும். பாபா சொல்கின்றார் உங்கள் சுயமரியாதையுடன் எப்பொழுதும் நிலைத் திருங்கள். நாம் நற்பண்புகளோடு நிறைக் களஞ்சியமாகும் போது விகார மற்றவர்களாகி, சுயராஜ்ய அதிகாரிகளாகிறோம். பொறுமை சக்தி யானது கோபத்தை கட்டுப்படுத்தும். சுய மரியாதையுடன் பழகுவது மற்றவரின் கோபத்தால் நாம் பாதிக்கப்படாமல், மற்றவரின் கோபத்தையும் தன்மீதான கோபத்தையும் வெல்லக் கூடியதாகும். சகிப்புத் தன்மையுடைய பண்பானது உங்களுக்கு மற்றவரின் ஒப்புதல், உயர்ந்த பாராட்டுதல் பெறச் செய்து மதிப்பையும் உயர்த்தும். மன்னிக்கும் தன்மையின் சிறப்பு, நம்மை லேசாக உணரச் செய்து, பிணைப்பு களின் பாதிப்புகளிலிருந்து விடுவிக்கும்.

நிராகாரி அவ்யக்த நிலையானது நம்மை விதை நிலைக்கு அழைத்துச் செல்லும். நிராகாரி நிலையின் கதவுகள் திறக்க நான் எனது என்னும் உணர்வுகளை நாம் கடக்க வேண்டும். ஆத்மாவின் விதை நிலையானது சூட்சுமமான ஸ்திதியாகும். இது உடலின் உணர்விலிருந்து முற்றிலும் விடுப்பட்ட நிலையாகும். நான் எனது எனும் அகங்காரத் தினை வென்ற நிலை. விதை நிலையில் முதலாவதாக நாம் உணர்கின்றோம். கண்ட வெற்றிகளுக்கெல்லாம் காரணம் நான் அல்ல. விதை நிலை எல்லா சக்திகளும் அடங்கியுள்ள நிலையாதலால் அவை வெளியே கொண்டுவர ஞானத்தின் சக்தி தேவையாகிறது. ஆகையால் அகங்காரத்தினை வெல்ல, நிரகங்காரியாக, ஆத்மா தன்னுள் நோக்கியவாறு ஆய்வு செய்ய வேண்டியதாகிறது. நான் ஞானத்தை சரியான முறையில் உபயோகப் படுத்துகிறேனா? ஞான மானது என்ன உண்மை உரைக்கிறது? இந்த வெற்றி எல்லாம் என்னுடைய முயற்சியினா லேயன்றி அகங்காரத்தை உள்ளுணர்வு நோக்குடன் ஆராயச் செய்கிறது. உண்மை அது அல்ல என்று உணர்ந்து மற்றவரின் முயற்சிக் கும், மதிப்பும், மரியாதையும் கொடுத்து சூட்சும அகங்காரம் மாற்றமடைகிறது. இவ்வாறு பாபாவின் ஞானத்தை நினைவில் கொண்டு, பாபாவுடன் மனமுவந்து நேருக்கு நேர் உரையாடல செய்வதால் தவறு எப்படி நடந்தது என அறிந்து தன்னுடைய குறிக்கோளுக்கு மாறாக சென்றுக் கொண்டிருக்கிறேன் என உணர முடிகிறது. உள்ளம் திருப்தி இயல்பாக அனுபவம் செய்கிறது. பழுத்த பழம் விதையுடன் ஒட்டாது விலகிவிடும். நாம் முழுமையடைந்தால் விகாரங்கள் விடுபட்டு விடும்.

இப்பொழுது நீங்கள் உண்மையான மகாரதி ஆகிறீர்கள். யானை மீது சவாரி செய்ப வராகிறீர்கள், யானைக்கண் உடைவராக அல்லாமல், நீங்கள் சாட்சியாக விலகிக்

கொள்கிறீர்கள். மற்றவரையும மதித்து, அவர்கள் பண்புகளையும் அறிகிறீர்கள். உள்ளமானது மேலும் தூய்மையடைகிறது. தூய்மையான மனம், கள்ளம் கபடமற்ற உள்ளம் அதில் சக்திகள் நிலையாக தன் இயல்பாகப் பாய்கிறது. உங்களுக்கு கிடைக்கும் பலனை மகாரதி யாகயிருந்து அனுபவம் செய்கிறீர்கள். உள்ள மானது எனது எனது என்றுச் சொல்லாமல் பாபா பாபா என்னே டிராமா என்னே எனது பாத்திரம், என்னே என் சங்கமயுக பிராமண வாழ்க்கை எனப்படும்.

உங்களுடைய அகங்காரமில்லாத நிலையில் மற்றவரும் உங்கள் சுயமரியாதையை உணரச் செய்கிறார்கள், நீங்கள் தன்னடக் கத்தைப் பயின்று மற்றவருக்கு மரியாதைக் கொடுக்கிறீர்கள். உங்களுடைய மேலான ஆன்மீக உணர்வுகளை நிலை நாட்டு கின்றீர்கள் இல்லை யென்றால் வீழ்ச்சியே காண வேண்டும். ஏனென்றால் ஆணவம், அகங்காரமுள்ளவர், தனித்து நிற்பார்கள், மற்றவரை நம்புவது இல்லை. எப்பொழுதும் தான் எனும் போதையில் இருப்பர்.

தன்னைத்தான் இவ்வாறு சோதித்துப் பார்த்துக் கொள்வது மரியாதையை வளர்க்கிறது. மற்றவரை நீங்கள் மதிக்க பாராட்ட தொடங்கு கிறீர்கள். தானாகவே எதிர்மறையான குணங்கள் நேர்மறையாக மாறும். தவறுகள் நம்முடைய தவறுகளாக ஏற்றுக் கொள்ளப்படும். தலைவரானவர் சொல்வார், நான் தேவையான கவனம் செலுத்தாததால் தவறு நடந்தது தன் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறார், மற்றவர்மீது குற்றம் காண்பது இல்லை. அதனால் தேவை யான திருத்தம் செய்ய முடிகிறது. இவ்வாறு குற்றம் காணாமல் நல்லெண்ணத்துடன் தவறுகள் விமரிசனம் செய்வது, ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனால் ஒற்றுமையானது ஓங்கும்.

அகங்கார நிலைகளிலும் சூட்சுமமான நிலை இருக்கின்றது. நான் முன் நிலையில் வர என்னுடைய ஆன்மீக உணர்வை நன்கு உயர்த்திக் கொள்ள வேண்டும். சூட்சும அகங்காரமானது பாபா என்னை உபயோகித்துக் கொள்கிறார், என்னுடைய குணங்கள் உபயோகமாகிறது, பிராமண ஆத்மாக்களின் குணங்களும் பாபா உபயோகித்துக் கொள்கிறார், எப்பொழுதும் பாபா என்னை உபயோகித்துக் கொள்கிறார் என எண்ணுங்கள். இதில் பேரின்ப மிருக்கிறது - அகந்தையல்ல. இது சூட்சும மான நல்அகங்காரமாகும்.

## என் பாபா

இரவுகளின் இருட்டும்
மனங்களின் அழுக்கும்
மறைந்தது உன்னால்
எங்களுக்குள் இனிய விடியல் !

நெஞ்சம் சுமக்கும் சுமைகளை
உனக்குத் தந்தோம் நீயோ
சுமைகள் நீக்கிய நெஞ்சத்தை
எமக்குத் தந்தாய்.

வீணான எண்ணங்களை
உன்னிடம் கொட்ட
வெற்றியின் எண்ணங்களை
எமக்குத் தந்தாய் !

எம் தந்தையே !
இனிமையின் இணிமையே!
பணங்களின் பின்னாலும்
பதவிகளின் பின்னாலும்
அலையும் எங்களின் மனதை

உண்மையான ஒளியின் முன்னே நிறுத்தி
ஒளிர வைத்தாய்! என் பாபா!

# முன்னேற்றமும் ஆன்மீகமும்



**பி.கு. சுவாதி, சென்னை**

இந்நாட்களில் உலகின் ஒவ்வொரு துறையிலும் குறிப்பிடும்படியான முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டுள்ளது. முன்னர் 10 ஆண்டுகளில் இல்லாத பெரும் வளர்ச்சியானது வெகு வேகமாக நடந்துக் கொண்டிருக்கின்றது. உலகின் எந்த துறையைப் பார்த்தாலும் காண முடிவது என்னவெனில், வீட்டில் இருந்த படியே பிற இடங்களில் நடைபெறுவதை கண்டு விடலாம், யாருடனும் தொடர்பு கொள்ள முடியும், கொடுக்கல்-வாங்கல் செய்ய இயலும், ஏற்றுமதி-இறக்குமதி செய்ய முடியும். இவை அனைத்தும் ஒரு விளையாட்டு போலவே தானே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகாயமார்க்கம், தரை வழி, கடல்வழி என மூன்று மார்க்கத்திலும் பாதுகாப்பும், வசதிகளும் சௌகரியங்களும் மேலும் தீவிர வேகத்தில் உற்பத்தி செய்யப்படும் சாதனங்களும் உலகத்தை சிறியதாக ஆக்கி விட்டுள்ளது. எனவே தான் ஆங்கிலத்தில் Global Village என்கிறார்கள். கட்டுமானத்தில் தினமும் புதிய வடிவங்கள், முறைகள் மற்றும் குறைந்த நேரத்தில் பல மாடிக்கட்டிடங்களை உருவாக்கி வானத்தை தொடும் பிரம்மையை ஏற்படுத்தி விடுகிறது. நவநாகரீகமும், ஆடை, அலங்காரத்தின் செயற்கை சாதனங்கள், உண்மையான தங்கம் வைரத்தை கூட தோற்க வைத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு துறையிலும், எண்ணிலடங்கா வண்ணம் படைப்புகள் உருவாக்குதல் என்பதே இன்றைய முக்கிய செய்தியாக இருக்கின்றது.

***வளர்ச்சிப் பாதையில் ஆன்மீகத்தின் பங்கு***

வாழ்க்கையில் வளர்ச்சி எனும் ஓட்டப் பந்தயமானது ஒலிம்பிக் தடகள வீரர்களின் ஓட்டத்தை போன்று தீவிரமானது. ஆனால் வளர்ச்சி எனும் ஓட்டத்தில் ஆங்காங்கு முன்னேற்றத்துடன் சீரழிவும் காணப்படுகிறது. மாறிவரும் உலக சூழலில் ஆன்மீகம் மேலும் நற்பண்புகளுக்கு அதிக முக்கியத்துவம் இல்லாமல் இறுதிக்கு தள்ளப்பட்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியுடன் கூடவே நற்பண்புகளும் இணைந்து செயல்படாததால் ஒரு புறம் முன்னற்றம் கண் முன் தெரிந்தாலும் கூட அது கானல் நீர் போலவே காட்சியளிக்கிறது.

***முன்னேற்றத்தின் உண்மை நிலை:***

முன்னேற்றம் என்பது இன்று தலை கீழான மாற்றத்தை தான் ஏற்படுத்தி யுள்ளது, ஏனென்றால் ஒருவர் தனது வாழ்க்கையில் பெருமளவு வளர்ச்சி பெற்று உள்ளார் எனில் அவர் அதிகத்திலும் அதிகமாக போகப் பொருட்களுடன் வாழ்பவராக தான் காணப் படுகிறது. சுகபோக வாழ்க்கை உண்மை யான உழைப்பால் பெற இயலாத போது குறுக்குவழி, திருட்டு, பொய், கலப்படம் என மாற்று குற்றமுள்ள முன்னேற்றத்தை எட்டி விடு கிறார்கள். வெறும் ஸ்தூல பொருட்களின் ஆதிக்கம் மட்டுமே வளர்ச்சி என் பெரும் பாலோர் என்னும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டனர். எது வாழ்க்கைக்கு மிக அதி அவசியமானது அதிலிருந்து விலகி நாளுக்கு நாள் உற்பத்தி செய்யப்படும் புதிய புதிய ஆடைகள், அணிகலன்கள், காலணிகள், அலங்காரப் பொருட்கள் என போகப் பொருட்கள் மீது தனது நேரம், எண்ணம், செல்வத்தை செவழித்துக் கொண்டுள்ளனர்.

தவறான முறைகளில் செல்வத்தை சம்பாதித்து அதனை பொருட்களை சேர்ப்பதில் செலவு செய்கின்றனர்.

**யந்திர வாழ்க்கையில் தொலைந்து போன நற்பண்புகள்**

பொருட்களின் உலகத்தில் (Materialistic world) நற்பண்புகளுக்கான மதிப்பு மறைந்து, நாகரீகத்திற்கு அதிகளவு முக்கியவத்துவ மாகி விட்டது. இதில் ஆன்மீகம், நற்பண்புகள் என்பது கடினமான வார்த்தையாக தோன்று கிறது.

ஆனால் உண்மையில் பார்க்கும்போது ஆன்மீகம் என்பது மிகவும் எளிதான ஒன்று. இது வாழ்க்கையின் முழு வளர்ச்சியையும் (HOLISTIC DEVELOPMENT) ஏற்படுத்தக் கூடியது என்பது யாராலும் மறுக்க முடியாது என இருப்பினும் கூட அதனை ஏற்கும் மனோ பாவனை காணாமல் போய்விட்டது.

முன்னேற்றம் எனப்படும் பொருளாதார வளர்ச்சியின் காரணமாக பலமுறை உலகத்தை அழிக்கவல்ல ஆயுதங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது மேலும் கல்வியிலும் கூட நற்பண்பு கள் விலக்கப்பட்டு, அது வெறும் உடல் நிர்வாகத்திற்கான சாதனமாக மட்டுமே ஆகி விட்டது. இன்று உள்ள அனைத்து பிரச்சனை களுக்கும் முக்கிய காரணம் பொருளாதாரம், சுயநலமான உணர்வு போன்றவையே.

மகாத்மா காந்திஜி கூட தீர்க்க தரிசியாக குறிப்பிட்டது யாதெனில் **அணு ஆயுதம் படைப்பவர்கள் பிறரை அழிக்க உருவாக்கு வதுடன், தன்னுடைய அழிவிற்காகவும் அவசியம் படைக்கிறார்கள்.** இந்த வாக்கியத்தின் உண்மை உட்பொருள் என்னவென்றால் -

முன்னேற்றத்தின் அடிப்படை என்பது பொருட்களை உற்பத்தி செய்வது என்பது அல்ல மாறாக ஆன்மீக பண்புகளின் ஆதாரத்தில் கூட வளர்ச்சி உண்டாகும். சத்திய மானது என்னவென்றால் ஆன்மீக முன்னேற்றம் தான் உண்மையான வளர்ச்சி யாகும். யாரிடம் திருப்தி, ஒத்துழைப்பு, அமைதி, தைரியம், அன்பு, தூய்மை, மகிழ்ச்சி, ஸ்திர தன்மை, ஒருநிலைப்பாடு இல்லையோ அவர் உண்மையில் பின் தங்கியவராவார். பின்தங்கிய நிலையிலிருந்து வெளிக் கொண்டு வரவேண்டு மானால் அவர்களையும் கூட ஆன்மீக நற் குணங்களினால் நிறைத்துக் கொள்ளவேண்டும்.

**அழியும் உடலுக்கு இத்தனை மகத்துவம் தருவது ஏன்?**

நற்பண்புகளை நடைமுறை படுத்துவதற்கு ஆத்ம உணர்வு அவசியமாகும். ஆத்மாவை அறிந்த பின்னர் தான் உடல் மேலும் உலகாயத பொருட்கள் யாவும் சாரமற்றதாகவும் மேலும் கானல் நீர் போன்று உணரப்படுகிறது. எப்பொழுது ஆத்மீக உணர்வை மனிதன் பெறு கிறானோ அப்போது மரணத்திற்கு உட்படும் உடலுக்காக எதற்கு இவ்வளவு முயற்சி தருகிறோம் மேலும் பேராசையில் ஏன் அதிகளவு சேமிப்பு செய்கிறோம் என்பது உணரப்படுகிறது.

**மனித உடல் என்பது ஓர் ஜடப்பொருளே!**

பொருட்கள் உற்பத்தி போன்று மனித உடல் கூட இயற்கையின் அதிசயமான படைப் பாகும். மற்ற பொருட்கள் போன்று உடலுக்கும் கூட உற்பத்தியான நாள் மேலும் முடிவுறும் நாள் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

**உதாரணமாக:** ஓர் இனிப்பு பண்டம் தயாரிக்கப்படுகிறது என வைத்துக் கொள் வோம், அந்த பண்டம் தயாரிக்கப்பட்டு உறை யில் அடைத்த பின்னர் குறிப்பு என குறிப் பிடப்பட்டு இது 6 மாதத்திற்குள் உபயோகப் படுத்தப்பட வேண்டும். அதாவது 6 மாதத் திற்குள் மட்டுமே உபயோகப்படும் எனலாம்.

சற்று சிந்திப்போமேயானால் அந்த இனிப்பு பண்டத்தில் சேர்க்கப்பட்ட சர்க்கரை, மாவு, நெய் போன்றவை தனித்தனியாக வைக்கப் பட்டிருந்தால் அதன் காலாவதியாகும் நாள் மேலும் நீண்டதாக இருக்கும் மாறாக ஒன்றாக சேர்க்கப்பட்ட பின்னர் உபயோகத்தின் காலம் குறைந்து விடுகிறது. அது போலத் தான் இந்த உடலும் ஐந்து தத்துவங்களின் ஒருங்கிணைப்பினால் உற்பத்தி ஆகின்றது. இதற்கும் ஜென்ம நாள் மற்றும் காலாவதியாகும் நாள் நிச்சயிக்கப்பட்டு விடுகிறது. பிற பொருட்களுக்கு குறிப்பு மற்றும் எச்சரிக்கை

அச்சிடப்படுகிறது, இதனை சூரிய ஒளி, நெருப்பிலிருந்து தூரத்தில் வைக்கப்பட வேண்டும். அது போலவே இந்த உடல் எனும் ஜடப்பொருள் போதைப் பொருட்கள், தண்ணீர் நெருப்பு போன்ற விதவிதமான பொருட்களிலி ருந்து பாதுகாக்கப்பட்டால் குறைந்ததிலும் குறைந்தது 80 வயது வரை கூட உயிர் வாழ முடியும். ஆனால் கவனக்குறைவுடன் இருந்து விட்டால் கர்மவினையின் காரணமாக கருவிலி ருந்து கூட அதன் தண்டனையை அடைய வேண்டிவரும்.

**உடலில் இருந்தாலும் ஆத்மா தனிப் பட்டதே...**

உடலும் ஓர் படைப்பு எனப்படும்போது, பிற ஸ்தூல பொருட்கள் போல இதனை ஏன் பேணிக்காக்கக் கூடாது? உடலை பயன்படுத்தி வரும் ஆத்மா, தன்னில் உள்ள அழியாத சக்தி களை உடல் மூலமாகத் தான் பயன்படுத்த வேண்டும்.

ஆத்மா எனப்படும் உயிர் சக்தி சூட்சும மான பிரகாசமான ஒளிப்புள்ளியாகும். அது இரு புருவங்களின் மத்தியில் நிலைத்து உடலை நடத்திக் கொண்டு வருகிறது.

உடலில் இருந்து கொண்டு உடலை இயக்கினாலும் கூட ஆத்மா தனிப்பட்டதே. எடுத்துக்காட்டாக பார்த்தோமேயானால் நாம் ஓர் வீட்டில் வசிக்கிறோம், ஆனால் எதிர்பாரா விதமாக நெருப்பு பற்றிக் கொண்டால் தன்னை பாதுகாத்துக் கொள்ள தப்பித்து ஓடி விடுவோம் அல்லவா! ஆனால் அந்த அறை யில் உள்ள நாற்காலி, மேஜை, பிற பொருட்கள் ஓடுவ தில்லை, ஏனென்றால் அது ஜடம் என்று அறிந்திருக்கிறோம். அது போன்று தான் மனித உடலுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் அதில் வசிக்கும் ஆத்மா இவ்வுடல் வசிப்பதற்கு தகுதியற்றது என உணர்ந்து பறந்து சென்று விடுகிறது, ஆனால் உடலின் பிற உறுப்புக் களான கண், வாய், கால், கைகள் போன்றவை பறந்து செல்வதில்லை. ஏனென்றால் அது ஜடமாகும். உணர்வுடையது என்றால் அது ஆத்மா தான் அது உடலில் பிரவேசித்து இந்திரியங்களை பயன்படுத்திக் கொள்ளும் ஆனால் ஏதேனும் விபத்து நேர்ந்தால் பிரிந்து சென்று விடும்.

**ஆத்மீக உணர்வே தடையில்லா முன்னேற்றத்திற்கான வழி:**

ஆத்மாவின் சத்தியமான அறிமுகத்தை பரம தந்தையான இறைவன் தருகிறார்:

பரமாத்மாவும் கூட ஓர் பிரகாசமான ஜோதி வடிவமாக இருப்பினும், குணங்களை பொறுத்த மாட்டில் கடல் போன்றவர். அவர் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களின் வான மண்டலத் திற்கும் அப்பால் பரந்தாமத்தில் வசிக்கின்றார்.

ஆத்ம அனுபவமும், எண்ணங்களின் சக்தியினாலும் ஆத்மா பரந்தாமத்திற்கு எளிதாக சென்று சேர்ந்து விடமுடியும் மேலும் இறை சந்திப்பின் அற்புதமான அனுபவத்தை பெற முடியும். இந்த சந்திப்பு ஆன்மீக சுகத்தை உணர வைப்பதால், இதனை பெற்ற பின்பு உலகாயத விருப்பங்களின் இச்சை இருப்ப தில்லை.

பரமாத்மா தந்தையினுடனான இந்த சந்திப்பு இராஜயோகம் என்றழைக்கப்படுகிறது. மேன்மையான வழியாகும். எனவே உலகளவில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம் அழிவை நோக்கி சென்றுக் கொண்டி ருக்கும் போது மறுபக்கத்தில் ஆன்மீக உணர் வானது நற்பண்புகள் நிறைந்த சுகம்-அமைதி நிரம்பிய உண்மையான முன்னேற்றத்திற்கு வழி வகுக்கக் கூடியதாகும் மேலும் உன்னத உலகிற்கான திறவு கோலாகும். ஆன்மீக உணர்வு பெறுவோம்! ஆக்கப்பூர்வமான முன்னேற்றத்தை பெறுவோம்!

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அன்னபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர்,சென்னை-40
அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை- 5 R.No.49463/87